# இலக்கு

GLOBAL TAMIL MEDIA CENTER

ilakku.org

வாராந்த மின்னிதழ்

SUBSCRIBE US! youtube.com/c/IlakkuWeb

LIKE US! facebook.com/ilakku.ilakku.10

FOLLOW US! twitter.com/Ilakku1

இதழ் 275 சனி, பெப்ரவரி 24, 2024 16 பக்கங்கள்




## யாப்புச் சிக்கலாக மாறியுள்ள தமிழரசின் ஆதிக்கப் போட்டி

அகிலன்

## ஈழத்தமிழர் பண்பாட்டு மீளுருவாக்கத்திற்கு ஐ.நா.வின் அனைத்துலக நாட்களைப் பயன்படுத்தப் பழக வேண்டும்

சூ.யோ. பற்றிமாகரன்



## சமூகஊடக போராளிகளுக்கு வைக்கப்பட்டிருக்கும் "ஆப்பு"

எச்சரிக்கும் அருட்தந்தை சக்திவேல்


info@ilakku.org © 2024 இலக்கு இணையம்

# தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு எதிரான போராட்டம் மீண்டும் ஆரம்பம்



தையிட்டி சட்டவிரோத விகாரைக்கு எதிரான போராட்டம் வியாழக்கிழமை(22) ஆரம்பமாகியுள்ளது. வெள்ளிக் கிழமை(23) மாலைவரையிலும் இந்த போரட்டம் தொடர்ந்து இடம் பெற்றது.

குறித்த இந்த போராட்டமானது தொடர்ச்சியாக ஒவ்வொரு பௌர்ணமி தினத்திலும் இடம் பெற்று வருகிறது.

அத்துடன் இந்த போராட்டத்தில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம் சுகாஷ், உறுப்பினர்கள் ஆதரவாளர்கள் பொதுமக்கள் அனைவரும் கலந்துகொண்டுள்ளனர்.

# பயனாளிகளுக்கு வீடு நிர்மாணிப்புக்கான உதவிகள் வழங்கி வைப்பு




திருகோணமலை மக்கள் சேவை மன்றத்தினால் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் 25 பயனாளிகளுக்கு நிரந்தர வீடுகள் நிர்மாணிப்புக்கான முதற்கட்ட காசேலைகள் வழங்கி வைக்கும் நிகழ்வு வியாழக்கிழமை (22) மக்கள் சேவை மன்றத்தின் தலைவர் எம். ரீ. எம். பாரிஸ் தலைமையில் திருகோணமலை கிளை இலங்கை செஞ்சிலுவைச் சங்க கட்டிடத் தொகுதியில் இடம்பெற்றது.

சிலி நாட்டினைத் தலைமையமாகக் கொண்டு இயங்கும் சர்வதேச தொண்டு நிறுவனமான செலவிப் பவுன்டேஷன் மற்றும் வன்னி ஹோப் நிறுவனங்களின் நிதி அனுசரணையில் திருகோணமலை மற்றும் வாகரைப் பிரதேசங்களில் நிர்மாணிக்கப்படவுள்ள நிரந்தர வீடுகளுக்கான முதற்கட்ட காசோலைகள் குறித்த பயனாளிகளுக்கு கையளிக்கப்பட்டது.

யுத்தம் மற்றும் இயற்கைப் பேரழிவுகாரணமாக நிரந்தர வீடுகள் இன்றி கஷ்டப்பட்டு ஓலைக் குடிசைகளில் மிக நீண்டகாலமாக வாழ்ந்து வந்த குடும்பங்களுக்கே மேற்படி வீட்டுத்திட்ட உதவிகள் வழங்கிவைக்கப்பட்டது. இந்த வீட்டுத் திட்ட உதவிகள் தமிழ், முஸ்லிம், சிங்கள இனம் என்ற பாகுபாடின்றி நீண்டகால வீட்டுத் தேவையுடைய அதிக குடும்ப உறுப்பினர்களைக் கொண்ட நாளாந்தக் கூலித் தொழில் செய்து வீடுகள் நிர்மாணிக்க வசதியற்ற குடும்பங்களுக்கே இந்த உதவிகள் கிடைக்கப்பெற்றுள்ளது.

தலா சுமார் 10 இலட்சம் பெறுமதி கொண்ட இந்த வீடு

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

# ரெஸ்லாவை பின்னுக்கு தள்ளிய மெர்ஸடீஸ் பென்ஸ்

உலகில் முன்னணி கார் என்ற இடத்தை ஜேர்மனின் மெர்ஸடீஸ் பென்ஸ் நிறுவனம் மீண்டும் தக்கவைத்துள்ளது. கடந்த வருடம் பென்ஸை அமெரிக்காவின் ரெஸ்லா நிறுவனம் பின் தள்ளியபோதும் இந்த வருடம் பென்ஸ் தனது இடத்தை மீண்டும் பிடித்துள்ளது.




இந்த வருடம் பென்ஸின் சந்தை பெறுமதி 60 பில்லியன் டொலர்களாக உயர்ந்துள்ளது. ஆனால் ரெஸ்லாவின் சந்தைப் பெறுமதி கடந்த ஆண்டில் இரந்ததைவிட 12 விகிதம் வீழ்ச்சி கண்டு 58.3 பில்லியன் டொலர்களாக வீழ்ச்சிகண்டுள்ளது.

எனினும் சீனாவின் மின்சாரக் கார் உற்பத்தி நிறுவனங்கள் தமக்கு கடும் போட்டியாக வளர்ந்து வருவதாக பென்ஸின் ஆசிய பசுபிக் பிராந்தியத்திற்கான விற்பனை முகாமையாளர் அலெக்ஸ் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது சீனாவின் கார் உற்பத்தி அதிகரித்து வருவதுடன் அதன் சந்தைப் பெறுமதி 20 விகிதங்கள் அதிகரித்து 12.1 பில்லியன் டொலர்களை எட்டியுள்ளது.

இதனிடையே, ரெஸ்லா நிறுவனத்தின் தலைவர் இலோன் முஸ்க் தெரிவித்துவரும் கருத்துக்கள் அவரின் வர்த்தகத்தில் பாதிப்புக்களை ஏற்படுத்தி வருவதாகவும் கூறப்படுகின்றது.

# பிரித்தானியாவின் மீன்பிடி உரிமத்தை இரத்து செய்தது ரஸ்யா



ரஸ்யாவிற்கு அருகில் உள்ள பரன் கடற்பகுதியில் பிரித்தானியா மீனவர்கள் கொட் மற்றும் கட்டொக் (cod and haddock) போன்ற பிரதான மீன் வகைகளை பிடிப்பதற்கான அனுமதியை கடந்த புதன்கிழமை(21) ரஸ்யாவின் நாடாளுமன்றம் இரத்துச் செய்துள்ளது.

இந்த கடற்பகுதியில் மீன் பிடிப்பதற்கான உடன்பாடு 1956 ஆம் ஆண்டு பிரித்தானியாவுக்கும் அன்றைய சோவித்து ஒன்றித்திற்கும் இடையில் ஏற்படுத்தப்பட்டிருந்தது. கோலா வளைகுடாவில் பிரித்தானியா கப்பல்கள் மீன் பிடிப்பதற்கான உரிமத்தை வழங்கிய இந்த உடன்பாடு ஒவ்வொரு 5 வருடங்களும் சுயாதீனமான புதுப்பிக்கப்படுவதுண்டு.

உக்ரைன் மீதான ரஸ்யாவின்

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

# சமூகவலைத் தளங்களை தடை செய்யும் இந்தியா

விவசாயிகளின் போராட்டத்தை தடுக்க சமூகவலைத் தளங்களை தடை செய்துவருவதாகவும் அது கருத்துச் சுதந்திரத்தை மீறும் செயல் எனவும் ருவிட்டர் சமூகவலைத்தளம் தெரிவித்துள்ளது.

இந்திய தலைநகர் டெல்லியை நோக்கி சென்று விவசாயிகள் போரட்டம் மேற்கொண்டு வருகையில் அவர்களின் போராட்டத்திற்கு ஆதரவான சமூகவலைத்தளப் பதிவுகளை நீக்குமாறு இந்திய அரசு சமூக வலைத்தளங்களுக்கு அதிக அழுத்தங்களை கொடுத்துவருகின்றது எனவும் தாம் சில பதிவுகளை



தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# இஸ்ரேலின் ஆக்கிரமிப்பை தடுக்க வேண்டாம் – அமெரிக்கா



இஸ்ரேலினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காசா மற்றும் மேற்குக்கரை பகுதிகளில் இருந்து அவர்களை வெளியேறுமாறு கோர வேண்டாம் என அமெரிக்காவின் வெளிவிவகார திணைக்களத்தின் சட்ட ஆலோசகர் றிச்சார்ட் விசேக் ஐக்கிய நாடுகள் சபையின் அனைத்துலக நீதிமன்றத்தை கடந்த புதன்கிழமை(21) கேட்டுக் கொண்டுள்ளார்.

ஒரு தலைப்பட்சமான இந்த நடவடிக்கை போரை முடிவுக்கு கொண்டுவராது. இஸ்ரேலின் பாதுகாப்புக்கு இந்த பகுதிகளில் இஸ்ரேலியர்கள் நிலைகொண்டிருக்க வேண்டும் என 15 நீதிபதிகள் கொண்ட சபையில் அவர் தெரிவித்துள்ளார்.

அதேசமயம், கடந்த ஒக்டோபர் மாதம் ஹமாஸ் படையினர் மேற்கொண்ட தாக்குதலுக்கான 2 மில்லியன் மக்களுக்கும் கூட்டாக தண்டனை வழங்க முடியாது. அதனை நாம் ஏற்றுக்கொள்ள

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

# பொதுமக்களின் கருத்துக்களை பிரதான ஊடகங்களால் மாற்ற முடியவில்லை–கனடா

நாடுகளில் உள்ள பிரதான ஊடகங்கள் பொதுமக்களின் கருத்துக்களில் மாற்றங்களை கொண்டுவருவதில் பிரதான பங்கு வகித்து வந்திருந்தன. ஆனால் அவற்றை தற்போது சமூகவலைத் தளங்கள் முறியடித்து வருவதாக



கனேடிய பிரதமர் ஜஸ்ரின் ரூடோ கடந்த புதன் கிழமை(21) தெரிவித்துள்ளார்.

சி.பி.சி மற்றும் சி.ரி.சி போன்றவை எமது ஊடகங்கள், அவைதான் எமது கருத்துக்களை பிரதிபலிப்பவை. எமது கருத்துக்களை மக்களிடம் கொண்டுசெல்வதற்கான ஒரே ஊடகங்கள் அவை தான் ஆனால் சமூகலைத் தளங்களால் அதனை நாம் எட்ட முடியவில்லை.

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

# எதிர்த்தாக்குதலை நடத்துவதற்கு பாலஸ்தீனியர்களுக்கே அதிக அதிகாரம் உள்ளது –சீனா

பாலஸ்தீன மக்களுக்கான நீதி மறுக்கப் படக்கூடாது என நெதர்லாந்தின் ஹெக் நகரில் இடம்பெறும் ஐக்கிய நாடுகள் சபையின் அனைத்துலக நீதிமன்ற விசாரணையில் பேசிய சீனாவின் பிரதிநிதி தெரிவத்துள்ளார்.

நீதி கிடைப்பதற்கு நீண்ட காலம் எடுக்கலாம் ஆனால் அது மறுக்கப்படக்கூடாது என சீனாவின் வெளிவிவகார அமைச்சகத்தின் சட்ட ஆலோசகர் மா சின்மின் கடந்த வியாழக்கிழமை(22) தெரிவித்துள்ளார். பாலஸ்தீன மக்களின் இறைமைய மீறி அவர்களின் இடத்தில் இஸ்ரேலியர்களின் ஆக்கிரமிப்பு ஆரம் பமாகி 56 வருடங்கள் கடந்துவிட்டன. ஆனால் இந்த சட்டவிரேத ஆக்கிரமிப்பின் நிலை இன்றும் மாற வில்லை.




இஸ்ரேலினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காசா மற்றும் மேற்குக்கரை பகுதிகளில் இருந்து அவர்களை வெளியேறுமாறு கோரவேண்டாம் என அமெரிக்காவின் வெளிவிவகார திணைக்களத்தின் சட்ட ஆலோசகர் றிச்சார்ட் விசேக் ஐக்கிய நாடுகள் சபையின் அனைத்துலக நீதிமன்றத்தை கடந்த புதன்கிழமை(21) கேட்டுக்கொண்டதற்கு பதிலடியாகவே சீனா இந்த கருத்தை தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் ஒரு அன்னிய நாடு அது ஒரு நாட்டை ஆக்கிரமிக்கும்போது தற்பாதுகாப்புக்காக பாலஸ்தீனயர்களுக்கு போராடுவதற்கு இஸ்ரேலைவிட அதிக அதிகாரம் உண்டு என சின்மின் மேலும் தெரிவித்துள்ளார்.

அனைத்துலக சட்டங்களின் அடிப்படை விதிகள் அனைத்தையும்இஸ்ரேல்மீறியுள்ளதுஎனஅயர்லாந்தின் பிரதிநிதி பேசும்போது தெரிவித்திருந்தார்.

இரு நாடுகள் என்ற தீர்வு தான் இரு நாட்டு மக்களும் அமைதியாக வாழ்வதற்கான ஒரே தீர்வு என தாம் கருதுவதாக யப்பானின் வெளிவிவகார அமைச்சகத்தின் சட்ட ஆலோசகர் ரொமகிரோ மிகாநகி தெரிவித்துள்ளார்.

பாலஸ்தீன மக்கள் சுயாட்சி அதிகாரத்துடன் வாழ்வதுடன் இஸ்ரேலின் ஆக்கிரமிப்புக்கள் முடிவுக்கு கொண்டுவரப்படவேண்டும். இதுவே நிரந்தர தீர்வுக்கான வழி என ஜோர்டானின் வெளிவிவகார அமைச்சகத்தின் சட்ட ஆலோசகர் மைக்கேல் வூட் தெரிவித்துள்ளார்.

பாலஸ்தீனத்தில் இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு தொடர்பில் 50 நாடுகளின் கருத்துக்களை அனைத்துலக நீதிமன்றம் கேட்டு வருகின்றது. இது இஸ்ரேலின் கொள்கைகள் தொடர்பில் அனைத்துலக நிபுணர்களின் கருத்துக்களை பாலஸ்தீன மக்கள் அறிந்துகொள்வதற்கு வழிஏற்படுத்தும்.

பாலஸ்தீன பகுதிகளில் இடம்பெற்றுள்ள இஸ்ரேலின் ஆக்கிரமிப்புக்கள் சட்டவிரேதமானவை என்பதை நீதிபதிகள் அறிவிக்க வேண்டும். அப்போது தான் இரு நாடுகள் என்ற தீர்வு சாத்தியமாகும் என பாலஸ்தீனம் அனைத்துலக நீதிமன்றத்தை இந்த வாரம் கேட்டுள்ளது.

மேற்குக்கரை பகுதியில் இஸ்ரேலின் சட்டவிரோத குடியேற்றவாசிகளுக்கும் பாலஸ்தீன மக்களுக்கும் இடையிலான மேதல்கள்

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

ஆசிரியர் தலையங்கம்

# பாரத் - லங்கா கூட்டாண்மை இறைமையில் ஈழத்தமிழர் இறைமை மேலும் கேள்விக்குறியாகிறது

சிறிலங்காவின் முன்னாள் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சரும் அரசதரப்புப் பாராளுமன்ற உறுப்பினருமான சரத்வீரசேகர, "இந்திய ரூபா இலங்கையில் பயன்படுத்தப்படும் பணமாகிவிட்டதும், சிறிலங்காவின் கேந்திர மையங்களான துறைமுகங்கள் மற்றும் விமானநிலையங்களை இந்தியாவிற்கு வழங்கப்பட்டு வருவதும், இந்தியாவில் 44 இலட்சம் வேலையில்லாதவர்களும் தொழில் இல்லாதவர்களாக 2 இலட்சம் வைத்தியர்களும் 15 இலட்சம் பொறியியலார்களும் உள்ள நிலையில் எட்கா ஒப்பந்தத்தின் மூலம் சிறிலங்காவில் இவர்கள் தொழில் பெறும் நிலை உருவாக்கப்படுவதும், இந்தியாவின் 29வது மாநிலமாகச் சிறிலங்காவை அடையாளப்படுத்தும் முயற்சியாக உள்ளது. நாங்கள் அனுமதிக்கப் போவதில்லை" எனச் சிறிலங்காப் பாராளுமன்றத்தில் பாரத் லங்கா கூட்டாண்மை இறைமையுள்ள நாட்டின் நடைமுறையாட்சி உள்ளதென்பதைச் சீரணித்துக் கொள்ள இயலாமல் குமுறியுள்ளார். பாரத் லங்கா வீடமைப்புத் திட்டம் போன்ற இன்றைய பெயரீடுகளே கூட்டாண்மையை இரு நாடுகளுமே வெளிப்படுத்தியுள்ளமைக்குச் சான்றாகிறது. இந்தியாவுக்குச் சிறிலங்கா அரசியல்வாதிகள் மட்டுமல்ல அரசாங்க சிவில் நிர்வாக அதிகாரிகளும் அரசாங்க ஊழியர்களும் கூடக் குறுகிய காலப் பயிற்சிகளுக்குச் சென்று, இருநாடுகளும் இரண்டாக இருந்தாலும் இரண்டல்ல என நடைமுறையில் எவ்வாறு செயற்படுவது என்பது குறித்தே பயிற்சி பெற்று வருகின்றனர்.

இதனை உணர்ந்தவராகவே தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச "டெலிக்கொம் நிறுவனத்தையும் மின்சார சபையையும் துண்டுகளாப் பிரித்தும் இந்தியாவுக்கே வழங்கவுள்ளனர். மன்னார் காற்றாலை மின்னுற்பத்தியின் அதிகாரத்தையும் அதானிக்கு வழங்கவுள்ளனர். இறுதியில் எது எமக்கு எஞ்சியிருக்கிறது? எட்கா உடன்படிக்கையில் கையொப்பமிட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன ஆனால் அந்த ஒப்பந்தத்தை அமைச்சரவை அமைச்சர்கள் கண்ணாலேயே காணவில்லை. ஆனால் அதற்கான தனியான அலுவலகம் அமைக்கப்பட்டுச் செயலாளரும் நியமிக்கப்பட்டுள்ளார். தற்போது எமது அடையாள அட்டையையும் இந்தியாவே வழங்கவுள்ளது. இதன் மூலம் இந்தியா சிறிலங்காவின் தரவுக்கட்டமைப்பைப் பெற்றுக்கொள்ளவுள்ளது. அதே போன்று மில்கோ நிறுவனத்தையும் செயற்பட அனுமதித்து எட்கா ஒப்பந்தத்தையும் நடைமுறைப்படுத்தினால் இலங்கை என்று ஒன்றுமே இருக்காது. இந்நிலையில் குறைந்த பட்சம் அமைச்சர் ஹரீன் பெர்ணான்டோ சிறிலங்கா இந்தியாவின் பகுதி என்று கூறியமைக்காவது ராசபக்சக்களோ மொட்டுக்கட்சியோ அது எவ்வளவு பாரதூரமானது என்று கூறக்கூடச் சொல்லாது முதுகெலும்பின்றி இருக்கிறார்கள்" எனப் பேசித் தனது நெஞ்சக் குமுறலையும் வெளிப்படுத்தியுள்ளார்.

இந்த நிலை சிறிலங்காவக்கு இந்தோ சிறிலங்கா 1987 உடன்படிக்கை வழி தோன்றி "இந்தோ சிறிலங்கா தேசியவாதமாக இன்று பரிணாமடைந்துள்ளது என்று 17.02.2024 ஆசிரிய தலையங்கத்தில் ‘இலக்கு’ எடுத்துவிளக்கியிருந்தது. இவ்வாரம் அந்த இந்தோ சிறிலங்காத் தேசியவாதம் பாரத் சிறிலங்கா கூட்டாண்மை ஆட்சியாகப் பரிணாமம் அடைந்து வருவதைச் சிறிலங்காவின் சிங்கள அரசியல்வாதிகளின் ஏக்கம் மிகு சிறிலங்காப் பாராளுமன்றப் புலம்பல்கள் வழி எடுத்து விளக்குகின்றது.

மேலும் ‘உலகளாவிய ஊடகப் பரப்பும் சனநாயகத்தின் மேல் அதன் தாக்கமும்’ என்னும் மையப்பொருளில் அமெரிக்காவின் பொதுஇராஜதந்திரத்துக்கான துணைச் செயலாளர் எலிசபேத் எம் அலன் அவர்கள் கொழும்பில் இலங்கைப் பத்திரிகைகள் நிறுவனத்தில் பெப்ரவரி 19ம் திகதி உரையாற்றும் பொழுது "இணைய அணுகலைக் கட்டுப்படுத்துவதன் மூலமும் உள்ளடக்கங்களைத் தணிக்கை செய்வதன் மூலமும் பொதுமக்கள் இடமிருந்து தகவல்களைத் தடுக்கும் முயற்சிகளை அரசாங்கங்கள் தீவிரப்படுத்தும்போது நாம் குரல் கொடுக்க வேண்டும். ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் அமெரிக்காவில் ஊழலுக்கு எதிராகச்செயற்பட்டு" "மக்ரேக்கர்கள்" (வதந்தி பரப்புபவர்கள்) என ஜனாதிபதி தியடோர் ரூஸ்வெல்ட்டால் வகைமைப்படுத்தப்பட்ட புலனாய்வு ஊடகத்துறையின் தந்தையான ‘லிங்கன் ஸ்டெஃபென்ஸ் அவர்களின் 1904ம் ஆண்டு நூலான "தஷேம் ஒப் த சிட்டிஸ்’, அரசியல் தலைவர்கள் வர்த்தகர்கள் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்கள் இடையான உட்தொடர்புகளை உலகுக்குத் தெளிவுபடுத்தி, அமெரிக்க அரசியலை சீர்மைப்படுத்தியதை உதாரணங்களுடன் எடுத்து விளக்கினார். "இவை போன்ற நாடாகவா நாம் இருக்க விரும்புகிறோம்? என்ற கேள்வியை அவர் மக்களிடை ஊடகத்தின் வழி எழுப்பி சீர்திருத்தத்துக்கான கோரிக்கையை வெளிப்படுத்தி அரசாங்கத்தைப் பொறுப்புக் கூற வைக்கவேண்டும் என்றார். பத்திரிகைச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் மற்றும் அடிப்படை மனித உரிமைகள் குறித்து ஆர்வத்தை ஏற்படுத்துவது மட்டுமல்லாது நாட்டின் அபிவிருத்தியையும் வளர்ச்சிகளையும் வளர்க்கும் வகையில் எல்லா மக்களுக்குமான சனநாயகத்தை ஆதரித்து அனைவருக்குமான பாதுகாப்பையும் அமைதியையும் உறுதிப்படுத்தவும் உழைக்கவும் வேண்டும் என்றார். இதனாலேயே சிறிலங்காவின் பாராளுமன்றம் சனவரி மாதம் நிகழ்நிலை பாதுகாப்பு சட்ட மூலத்தை நிறைவேற்றியபோது, கருத்துச் சுதந்திரம் புத்தாக்கம் மற்றும் தனியுரிமை ஆகியவற்றில் அது ஏற்படுத்தக் கூடிய சாத்தியமான விளைவுகள் குறித்து அமெரிக்கா கவலை தெரிவித்தது" என்றார் இச்சட்ட மூலத்துக்கு எதிரான அமெரிக்காவின் கவலையை சிறிலங்காவிற்கான அமெரிக்கத் தூதுவர் யூலி யே சஞ் அவர்களும் வெளியிட்டிருந்தார். அத்துடன் பொருளாதார நெருக்கடி நேரத்தில் 60 மில்லியன் டொலர்களை வழங்கியும் சிறிலங்காவுக்கு வந்து ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசியதன் பின்னர் 65 மில்லியன் டொலர்களை அடுத்த ஐந்தண்டுகளுக்கு வழங்கவும் செய்த யு.எஸ். எய்ட்ஸ் நிர்வாகி சமந்தாப் பவர் "சிறிலங்காவில் கருத்துச் சுதந்திரம் நிகழ்நிலை காப்புச்சட்டத்தால் பாதிப்புற்றுள்ளமை குறிப்பாக டிஜிட்டல் பொருளாதாரம் நேரடிப்பாதிப்படைந்துள்ளதும் சிறிலங்காவின் சட்டமியற்றும் முறைமைகள் சனநாயக ஆட்சியைப் பேணுதல் குறித்தும் அமெரிக்காவின் கவலையை சிறிலங்கா ஜனாதிபதிக்கு மெய்நிகர் மூலம் வெளிப்படுத்தியுள்ளார். அமெரிக்காவின் இந்த அக்கறைகளுக்குச் சிறிலங்காவின் பதில் போல அமைச்சரவை முடிபுகளை வெளியிடும் ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சர் பந்துலு குணவர்த்தனா "சிறிலங்கா இறையாண்மையுள்ள சுதந்திரமான ஒரு நாடு. நமது நாட்டின் சட்டதிட்டங்கள் தொடர்பில் நாடாளுமன்றத்துக்கே உரித்துண்டு. அதில் தலையிட இது ஒன்றும் அமெரிக்காவின் பிராந்தியம் அல்ல" என வெளிப்படையாகப் பேசியுள்ளார். இவையெல்லாம் இரண்டல்ல என்ற நிலையில் பாரத் சிறிலங்கா கூட்டாண்மை ஆட்சி நடைமுறையில் வேகமாக அதிகரித்து வருவதையும் அமெரிக்காவும் பொருளாதாரக் கூட்டணியாக நெறிப்படுத்தல்களைச் செய்யும் என்பதையும் தெளிவாக்குகிறது. இந்தக் கூட்டாண்மை கூட்டணி ஆட்சி முறைமைகளுக்குள் ஈழத்தமிழர் இறைமை என்பது கேள்விக்குறியாகவே அமையும். சமுகம் என்ற நிலையிலேயே இருநாடுகளுமே ஈழத்தமிழர் தேசிய பிரச்சினையை அணுகி வருகின்றன. இந்நிலையில் ஈழத்தமிழர்கள் தாயகத்திலும் புலத்திலும் ஏற்பட்டுள்ள புதிய சமுக பொருளாதார அரசியல் ஆன்மிக மாற்றங்களுக்கு எவ்வாறு முகங்கொடுத்து தங்களது இறைமையை முதன்மைப்படுத்தித் தங்களுக்கான தன்னாட்சி மூலம் பாதுகாப்பான அமைதியுடன் கூடிய வளர்ச்சிகளை ஏற்படுத்தப் போகிறார்கள் என்பது இன்றுள்ள கேள்வி. இதற்குப் பதில் மாண்பமை எலிசபேத் யே அலன் அவர்களின் உரையில் உள்ளது. ஈழத்தமிழர்களின் ஒன்றிணைந்த குரலாக அமையக்கூடிய தேசிய ஊடகம் ஒன்றை உடனடியாக உருவாக்குவதே உலகில் பொதுக்கருத்துக் கோளத்தை உருவாக்குவதற்கு ஒரே வழி என்பதே இலக்கின் உறுதியான எண்ணம் ஊடகத்தின் வழியான திறந்த உரையாடல்களும் அறிவூட்டல்களும் தாயக உலக ஈழத்தமிழர்கள் இணைப்பும் காலத்துக்குரிய பதிலை வருவிக்கும்.

**ஆசிரியர்**



# யாப்புச் சிக்கலாக மாறியுள்ள தமிழரசின் ஆதிக்கப் போட்டி

**அகிலன்**

தமிழரசுக் கட்சிக்குள் இரு பிரிவினரிடையே உருவாகியுள்ள ஆதிக்கப் போட்டி, இப்போது ஒரு யாப்புச் சிக்கலை உருவாக்கி, நீதிமன்றத்தின் தீர்ப்புக்காக காத்திருக்கும் அவலத்தை ஏற்படுத்தியுள்ளது. கிளிநொச்சியில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்த்தர்கள் கலந்துகொண்ட ஆலோசனைக் கூட்டத்தில் சமரசத்துக்கு இடமில்லை என்பது உணர்த்தப்பட்டிருக்கின்றது. ஆக, நீதிமன்றத் தீர்ப்பின் பின்னர் மீண்டும் ஒரு தேர்தலை தமிழரசுக் கட்சி சந்திக்க நேரலாம்.

கட்சிக்குள் உருவாகியுள்ள யாப்புச் சிக்கல் கட்சி செயற்படமுடியாத நிலையை உருவாக்கி விடுமா என்ற கேள்வியையும் எழுப்பியுள்ளது. எழுபத்தைந்தாவது ஆண்டில் பயணிக்கும் அந்த மூத்த கட்சியின் அடுத்த கட்ட நகர்வு நீதிமன்றத்தின் தீர்ப்பில் தங்கியிருக்க வேண்டிய பரிதாப நிலை. பிரச்சினை இரு பகுதியினராலும், சமாதானமாகத் தீர்க்கப்படுமா, அல்லது கட்சியைப் பிளவுபடுத்தும் நிலைக்குக் கொண்டு செல்லுமா என்பதைத்தான் தமிழரசுக் கட்சி ஆதரவாளர்கள் ஏக்கத்துடன் பார்த்துக்கொண்டுள்ள நிலையில், சமரசத்துக்கு இடமில்லை என்பது உணர்த்தப்பட்டுவிட்டது.

தமிழரசுக் கட்சியைப் பொறுத்தவரையில் அதன் கட்சி யாப்பு மீறப்படுவது இதுதான் முதல் தடவையல்ல. பெருமளவுக்கு சட்ட அறிஞர்களையே பிரதானமாகக் கொண்டுள்ள தமிழரசுக் கட்சியின் யாப்பு தெரியாமல் மீறப்படுவதில்லை. தெரிந்துகொண்டுதான் மீறப்பட்டது. கட்சித் தலைவர் உள்பட செயற்குழு உறுப்பினர்களைத் தெரிவு செய்சதற்கான கூட்டம் திருமலையில் நடைபெற்ற போதே, அது முற்றுமுழுதாக யாப்பு விதிகளுக்கு உட்பட்டதாக நடத்தப்படவில்லை. இது அனைவருக்கும் தெரியும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் பொதுவான தெரிவு இணக்கமானதாக இருந்திருந்தால் “யாப்பு மீறல்” நீதிமன்றத்துக்குச் சென்றிருக்காது!

தெரிவுகள் தமக்கு ஏற்றதாக இல்லை எனக் கருதும் ஒரு தரப்புதான் இப்போது நீதிமன்றத்தின் படியேறி, தமிழரசுக் கட்சியின் மாநாட்டுக்கு இடைக்காலத் தடையைப் பெற்றிருக்கின்றது. யாழ்ப்பாணத்திலும், திருகோணமலையிலும் உள்ள இரண்டு நீதிமன்றங்கள் ஒரே நாளில் இந்தத் தடையைப் பிறப்பித்துள்ளன. கடந்த 19 ஆம் திகதி நடைபெற்றிருக்க வேண்டிய கட்சியின் மாநாடு காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றது. சிறீதரனின் தெரிவு உட்பட அனைத்துத் தெரிவுகளும் கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளன.

இதனால், உடனடியாக நன்மையடைந்திருப்பது மாவை சேனாதிராஜாதான். பத்து வருட காலமாக கட்சியின் மாநாட்டை நடத்தாமல் தலைமைப் பதவியில் இருந்த அவர், இந்தப் பிரச்சினை தீரும் வரை அந்தக் கதிரையிலிருந்து அசையத் தேவையில்லை. ஆனால், செயற்குழுவைப் பொறுத்தவரையில் பழைய செயற்குழுதான் இப்போதும் இருக்கிறதா - அதனால் தொடர்ந்தும் செயற்படமுடியுமா என்பதற்கும் பொருத்தமான விளக்கம் இல்லை. இதனால், தமிழரசுக் கட்சி பெருமளவுக்குச் செயலிழந்த நிலையை நோக்கிச் சென்றுகொண்டிருப்பதாகவே தெரிகின்றது.

தமிழரசுக்கட்சியின் இளைஞர்அமைப்பின் ஒரு தீவிர செயற்பாட்டாளராக இருந்து, பின்னர் கட்சித் தலைமையால் இடைநிறுத்தப்பட்ட வீ.எஸ்.சிவகரன் இது தொடர்பாக தெரிவித்துள்ள கருத்துக்கள் முக்கியமானவை. இவர் சொல்வது இதுதான் -

“2009 கட்சி மாநாட்டில் இருந்து யாப்பை பின்பற்றுவது இல்லை. நான் கட்சியில் இருந்த காலத்தில் பல முறை கூட்டங்களில் கூறியதுடன் எழுத்திலும் சுட்டிக்காட்டியுள்ளேன். யாவும் செவிடன் காது சங்கே. என்றோ ஒருநாள் இதற்கு பதில் சொல்வீர்கள் என்று பல முறை கூறியுள்ளேன். தற்போது நடைபெற்ற கட்சித் தேர்தல் முழுமையாக யாப்பை மீறியதே. கட்சியில் பொது இணக்கம் இல்லாத போது யாப்பு பேசு பொருளாகும் என்பதை இவர்கள் புரிந்திருக்க வேண்டும். ஒரு அமைப்பிற்கோ கட்சிக்கோ தாம் வகுத்த யாப்பு விதிகள் என்பது அச்சாணி போன்றது என்பதை இனியாவது புரிந்து கொள்ள வேண்டும்” என சிவகரன் சுட்டிக்காட்டுகின்றார்.

கட்சியின் யாப்பு பல இடங்களில் மீறப்பட்டுள்ளது என்பதை யாழ்ப்பாணத்திலும், திருமலையிலும் போடப்பட்டுள்ள வழக்குகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அவற்றில் முக்கியமான சிலவற்றை இங்கு தருகிறோம்.

கட்சியின் அடிப்படை உறுப்பினர்கள் இல்லாத பலர் பொதுச்சபையில் வாக்களித்துள்ளனர். இவர்களுக்கு அனுமதி வழங்கியது யார் என்பது கேள்வியாகவுள்ளது.

சாதாரண வருடாந்த தமது உறுப்புரிமையை மீள புதுப்பிக்கவில்லை. இவ்வாறு புதுப்பிக்காத குறைந்தது அறுபது நபர்களுக்கு மேல் எப்படி வாக்களிக்க அனுமதித்தார்கள்?

கட்சி யாப்பின் 12 விதி (ஆ) இவ்வாறு கூறுகிறது - ஆறு மாதங்களுக்கு உறுப்புரிமை கட்டணம் செலுத்தாதோரும் செயற்குழுவினால் வேண்டப்பட்ட குறைந்த இரண்டு வருடங்களுக்கு மேல் சேவை செய்யாதோரும் எந்தக் கூட்டத்திலும் எந்த தேர்தலிலும் வாக்களிக்க அருகதையற்றவர். ஆனால், அவ்வாறான பலர் வாக்களித்துள்ளார்கள்.

18 மாதங்களுக்கு மேல் கட்சிக் கட்டணம் - சந்தா செலுத்தாதோரும் குறைந்தளவு சேவை செய்யாதோரும் மத்திய செயற்குழுவினால் அங்கத்தவர் பட்டியலில் இருந்து நீக்கப்படக்கூடியவர். ஆனால், அவ்வாறு எவராவது நீக்கப்பட்டதாக தகவல் இல்லை.

ஒவ்வொரு தொகுதியில் இருந்தும் தலா ஐந்து உறுப்பினர்களே பொதுச்சபை உறுப்பினர்கள். அதன் படி 25 தொகுதிகளிலிருந்தும் 125 உறுப்பினர்கள். மத்திய குழு உறுப்பினர்கள் 41 பேர். ஆக மொத்தம் 166 நபர்களே பொதுச் சபை அங்கத்தவர்கள் ஆவார். அவர்களுக்குத் தான் வாக்களிக்கும் உரிமை உள்ளது. ஆனால் பொதுச் சபைக் கூட்டத்துக்கு 345 நபர்களுக்கு மேல் அழைக்கப்பட்டனர். அவர்கள் வாக்களித்தனர்.

பொதுச்சபைக் கூட்டத்திற்கு தலைவரது நியமனத்தில் எவரையும் அழைக்க முடியாது. கட்சியாப்பில் எங்கும் கோடி காட்டப்படவில்லை. ஆனால், 20நபர்களுக்கு மேல் அவ்வாறு அழைக்கப்பட்டனர்.

தலைவர் தேர்தலை பொதுச்செயலாளர் தலைமையில் தான் நடைபெறவேண்டும். ஆனால், செயலாளர் உடல் நிலை சீரற்றிருந்த போது தலைவருக்கான தேர்தல் நடத்தப்பட்டது. செயலாளர் இல்லாத போது தேர்தலை எட்டுப் பெயர் கொண்ட குழுவை வைத்து நடாத்துவதற்கு யாப்பில் இடமில்லை இந்த நியமன அதிகாரம் எவருக்கும் இல்லை. ஆனால், தலைவர் தேர்தல் அவ்வாறு நடத்தப்பட்டது.

பொதுச்சபை உறுப்பினர்களுக்கு பொதுக் குழுக் கூட்டம் தொடர்பாக 14 நாட்களுக்கு முன்னதாக அறிவிக்க வேண்டும் ஆனால் மாநாட்டிற்கு முதல் நாளே பலருக்கு அழைப்பு கிடைத்தது.

இந்த பகிரங்க யாப்பு மீறல்கள் தொடர்பில் பல உறுப்பினர்களுக்கு எதுவும் தெரியாது. பல உறுப்பினர்கள் யாப்பையே கண்ணால் கூட பார்த்தது இல்லை. அறிந்தவர்களும் அமைதி காத்தனர் என்பதுதான் உண்மை. மூத்த உறுப்பினர்கள் என்று கூறும் பலரும் யாப்பை பற்றி தவறான விளக்கங்கள் கூறினார்கள்.

இந்தப் பின்னணியில் தமிழரசுக் கட்சிக்கு எதிரானத் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்கள் மீதான விசாரணைகளுக்கு கட்சி சார்பாக ஆஜராகப் போவது யார் என்ற கேள்வி பெரிதாக எழுந்திருக்கின்றது. தன்னைக் கேட்டால், தான் ஆஜராகத் தயார் என சுமந்திரன் அறிவித்திருந்தார். ஆனால், மாவை - சிறீதரன் தரப்பு அதற்குத் தயாராகவில்லை. சுமந்திரன், “பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டுகிறார்” என தமிழரசின் மற்றொரு சட்டத்தரணியான கே.வி.தவராஜா கூறியிருக்கின்றார்.

இந்த “கேஸை” உடைப்பது கொஞ்சம்

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

# சமூகஊடக போராளிகளுக்கு வைக்கப்பட்டிருக்கும் "ஆப்பு"



## எச்சரிக்கும் அருட்தந்தை சக்திவேல்

**நிகழ்நிலை காப்புச் சட்டம் இலங்கையில் நடைமுறைக்கு வந்திருக்கின்றது. பெப்ரவரி முதலாம் திகதி அமுலுக்கு வந்த உடனடியாகவே, இச்சட்டத்தின் கீழ் ஒருவர் கைதாகியிருக்கின்றார். சமூக ஊடகம் ஒன்றில் அவர் வெளியிட்ட பதிவுதான் கைதுக்கு காரணம். நடைமுறைக்கு வந்த உடனடியாகவே தமது ஆட்டத்தை ஆரம்பித்துவிட்டது நிகழ்நிலை காப்புச் சட்டம்! இந்த சட்டத்தினால் வரப்போகும் ஆபத்துக்கள் என்ன என்பது குறித்து அனைத்துலக உயிரோடைத் தமிழின் தாயகக்களத்தில் அருட்தந்தை சக்திவேல் அவர்கள் முன்வைத்த கருத்துக்களை இலக்கின் வாசகர்களுக்காக இங்கே தருகின்றோம். இந்த நேர்காணலை காணொளியில் YouTube இல் முழுமையாகப் பார்ப்பதற்கு இங்குள்ள QR Code இனை ஸ்கான்(Scan)செய்யவும்.**

**இந்த நிகழ்நிலை காப்புச் சட்டத்தை அரசாங்கம் அவசரமாக நடைமுறைக்குக் கொண்டுவந்தமைக்குக் காரணம் என்ன?**

அரசாங்கத்துக்கு அரசியல் தேவை ஒன்றுள்ளது. வடக்கு கிழக்குப் பகுதிகளில் தமது அரசியல் நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்வதற்காக பயங்கரவாதத் தடைச் சட்டத்தைக் கொண்டுவந்த ஆட்சியாளர்கள், கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக அதனை நடைமுறைப் படுத்தினார்கள். இப்போது, முழு நாட்டையும் தங்களுடைய கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க வேண்டும் என்ற தேவை அவர்களுக்குள்ளது.

அதனைவிட, 2022 இல் தென்னிலங்கையில் உருவாகிய அரசியல் பேரலை போன்ற ஒரு போராட்டம் மீண்டும் உருவாகக்கூடாது என்பதில், அரசாங்கம் திட்டவட்டமாக தெளிவான நிலைப் பாட்டில் இருக்கின்றது. தற்போதிருக்கின்ற அரசியல், பொருளாதார நெருக்கடிகளுக்கு முகங் கொடுக்க முடியாத நிலையில் அரசாங்கம் இருக்கின்றது. அத்துடன், மக்களுக்கு ஒரு நல்வாழ்வைக் கொடுப்பதற்கும் அவர்கள் ஆயத்தமாக இல்லை என்பதுதான் இதற்குப் பின்னால் இருக்கின்ற செய்தி.

எனவே தமது இருப்பைத் தக்கவைத்துக் கொள்வதற்காக, தமது பாதுகாப்புக்காக, அடுத்த தேர்தலுக்கு முகம் கொடுப்பதற்காக, தேர்தலுக்குப் பின்னர் யார் ஆட்சிக்கு வருகின்றார்களோ அவர்களைப் பாதுகாப்பதற்காகத்தான் இந்த நிகழ்நிலை காப்புச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கின்றது. இது மக்களின் பாதுகாப்புக்காக என்று அரச தரப்பில் சொல்லப்பட்டர்லும்கூட, இதில் மக்களின் பாதுகாப்பு இல்லை என்பதுதான் எமது கருத்து.

**சமூக ஊடகங்களில் அதிகளவுக்குச் செயற்படுபவர்கள், சமூக ஊடகங்கள் மூலமாக கருத்துருவாக்கத்தை மேற்கொள்பவர்கள் இந்தச் சட்டத்தின் மூலமாக எந்தளவுக்குப் பாதிக்கப்படுவார்கள்?**

நிச்சயமாக அவர்கள் பாதிக்கப்படுவார்கள். இப்போது சமூக ஊடகங்கள்தான் மக்கள் மத்தியில் ஆதிக்கம் செலுத்திக்கொண்டுள்ளன. உடனுக்குடன் செய்திகளை மக்கள் மத்தியில் கொண்டு செல்பவையாகவும், நடைமுறை அரசியலை விமர்சனத்துக்குள்ளாக்குபவையாகவும் சமூக ஊடகங்கள் இருப்பதை நாம் பார்க்கின்றோம். அதுமட்டுமன்றி, புதிய புதிய கருத்துக்களை எப்போதும் மக்கள் மத்தியில் கொண்டு செல்பவையாகவும் சமூக ஊடகங்களே இருக்கின்றன.

இந்தப் பின்னணியில் அரசாங்கத்தினால் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டுள்ள நிகழ்நிலைக் காப்புச் சட்டம் பொதுமக்கள் மத்தியில் முதலாவதாக அச்சத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. இந்த அச்சம் என்பது உளவியல் ரீதியான தாக்கமாகக் கருதலாம்.

சமூக ஊடகங்களை முடக்குவதன் மூலம், சமூக ஊடக செயற்பாட்டாளர்களை முடக்குவதன் மூலம் முழு நாட்டையும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதுதான் அரசாங்கத்தின் திட்டம்.

எனவே, இது சமூக ஊடகங்களைப் பாதிப்பதுடன், சமூக ஊடகச் செயற்பாட்டாளர்களை உளவியல் ரீதியாகப் பாதிப்பதாகவும் அமைந்திருக்கின்றது.

**இதன் உள்ளடக்கத்தில் இருக்கக் கூடியவற்றில் அதிக பாதிப்பை ஏற்படுத்தக் கூடியவையாக நீங்கள் எவற்றைக் குறிப்பிடுவீர்கள்?**

பிரதான அம்சங்கள் எனக் கூறும்போது, கருத்துச் சுதந்திரம், சிந்தனை ஆற்றல் மற்றும் விமர்சன ஆற்றல். இவற்றைத் தடுக்கும் வகையில் இந்தச் சட்டம் இருக்கின்றது. தாம் சிந்திக்கின்ற ஒன்றை எழுத்து வடிவில் கொண்டுவருவதையும், அவற்றை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்வதையும் இது தடுக்கின்ற ஒன்றாக இருக்கின்றது. இதில் இருக்கின்ற பிரதான பாதிப்பாக இவற்றைக் குறிப்பிடலாம்.

இவ்வாறான ஒரு சிந்தனையோட்டத்தை மக்கள் மத்தியில் கொண்டு செல்ல முடியவில்லை என்றால், தான் சிந்திப்பதை தன்னுடைய கருத்துக்களை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ள முடியாதென்றால், அதனை ஒரு சிறைப்பட்ட வாழ்க்கை என்றுதான் சொல்ல வேண்டும். இந்த வகையில்தான் இந்தச் சட்டமூலம் சமூக ஊடகச் செயற்பாட்டாளர்களுக்கும் பெரும் பாதிப்பை இந்தச் சட்டம் ஏற்படுத்தப்போகின்றது.

**இதன் மூலமாக குற்றவாளிகளாகக் காணப்படுபவர்களுக்கு எவ்வாறான தண்டனைகள் பரிந்துரைக்கப்பட்டுள்ளது?**

தண்டனை என வரும்போது ஒரு மில்லியன் ரூபா வரையிலான தொகையை தண்டமாகச் செலுத்த வேண்டிய நிலை வரலாம். இதனைவிட நீண்ட காலச் சிறைவாசத்துக்கான வாய்ப்புக்களும் இருக்கின்றது. சாதாரணமான ஒரு குடிமகனுக்கு ஒரு மில்லியன் ரூபாவைச் செலுத்துவதென்பது நினைத்துப் பார்க்க முடியாத ஒன்று. நீண்ட காலம் சிறைக்குள் செல்வது என்பதும் கடினமான ஒன்றுதான். ஜனாதிபதியால் நியமிக்கப்படுகின்ற ஆணைக்குழுவினர்தான் எது குற்றம், எது குற்றம் இல்லை என்பதைத் தீர்மானிக்கப் போகின்றார்கள். இந்தக் குழுவுக்கு முறைப்பாடு செய்யக்கூடியவர்களாக யார் இருப்பார்கள் எனப் பார்த்தால், அவர்கள் அரசியல்வாதிகளாகத்தான் இருப்பார்கள். எனவே, இது ஒரு பக்க சார்பானதாக இருக்கப்போகின்றது.

எனவே, மக்கள் பொருளாதார ரீதியாகப் பாதிப்புக்குள்ளாகியிருக்கும் நிலையில் ஒரு மில்லியன் ரூபாவைத் தண்டமாகச் செலுத்துவதுவதற்கு நிர்ப்பந்திக்கப்படுவதும், நீண்ட காலத்துக்குச் சிறைவாவாசத்துக்கு

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# இடை நடுவில் கைவிடப்பட்ட பாலத்தை மக்கள் பாவனைக்கு திறப்பது எப்போது?

ஹஸ்பர் ஏ ஹலீம்

திருகோணமலை மாவட்டம் கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பூவரசந்தீவையும் - கல்லடி வெட்டு வானையும் இணைக்கும் வடசல்பாலம் கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றன.



இதனால் அப்பிரதேச மக்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

2021.10.16 ஆம் திகதி அன்று இப்பாலத் துக்கான அடிக்கல் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம். எஸ். தௌபீக் அவர்களால் பலரின் பங்கேற்புடன் விழாக் கொண்டாட்டம் அமைத்து அடிக்கல் நடப்பட்டது.

ஆறு மாதத்துக்குள் முடிந்து தருவேன் என மக்களிடம் வாக்குறுதி வழங்கப்பட்ட போதிலும் இன்னும் அவை நிறைவேற்றப்படவில்லை. இதன் காரணமாக இப் பகுதியில் சுமார் ஏழு கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பயணம் செய்து வருகின்றதுடன் விவசாயம், சிறு மீன்பிடி தொழில் என பல தேவையான முக்கிய அன்றாட ஜீவனோபாயத்துக்காக இவ் ஆற்றை கடந்தே மக்கள் செல்ல வேண்டியுள்ளது.

எனினும் அவை நிறைவேறவில்லை. மூன்று வருடங்கள் கடந்து நான்காவது வருடம் ஆரம்பித்த போதிலும் மக்கள் போக்குவரத்து



செய்வதற்கான ஏற்ற வகையில் இன்னும் நிறைவு செய்யப்படவில்லை. இதனைபூரணமாக்கி வீதியை அமைத்து மக்கள் பாவனைக்கு கையளியுங்கள் என அம் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

பாலத்தின் சில பகுதிகள் முடிவடைந்த போதிலும் இரு புறத்திலும் உள்ள வீதிகள் செப்பணிடப்படவில்லை, இதனால் மக்கள் போக்குவரத்து செய்ய முடியவில்லை.

பூவரசம்தீவிலிருந்து கல்லடி வெட்டுவானு க்கு செல்லும் மக்கள் பல்வேறு சிரமங்களை இதனால் எதிர்நோக்கி வருகின்றனர்.

பாடசாலை மாணவர்கள், வியாபாரிகள், கர்ப்பிணி தாய்மார்கள், நோயாளிகள் உட்பட பலரும் இப்பாலம் செப்பனிடப்படாததினால் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இது தொடர்பில் இதனை முன்னெடுத்த வீதி அபிவிருத்தி அதிகார சபையின் திருகோணமலை பிரதான பொறியியலாளர் அலுவலகத்திடம் தகவல் அறியும் உரிமை சட்டம் மூலமாக வினவிய போது இவ்வாறு பதில் கிடைக்கப் பெற்றது. கிண்ணியா பிரதேச சபைக்கு உட்பட்ட வடசல் பாலமானது வீதி அபிவிருத்தி அதிகார சபையின் *Rural Bridge Construction unit* இரத்மலானையின் ஊடாக நேரடியான கண்காணிப்பில் பால வேலைகள் நடைபெற்றதால் அங்கு பெறுமாறும்" சுட்டிக்காட்டப்பட்டது.

ஆனாலும் உரிய இரத்மலானைக்கான தகவல் அறியும் உரிமை சட்டத்தின் பிரகாரம் கோரப்பட்ட போதும் ஒரு மாதம் கடந்தும் பதில் கிடைக்கவில்லை. தகவல் அறியும் உரிமை சட்டத்தின் பிரகாரம் உரிய தகவல் தங்களிடம் இல்லாத பட்சத்தில் குறித்த கோரிக்கை கடிதத்தை வீதி அபிவிருத்தி அதிகார சபையே உரிய பகுதிக்கு அனுப்ப வேண்டும் ஆனாலும் இவர்களின் நடைமுறை சிக்கல் காரணமாக இவ்வாறு இழுத்தடிப்பு செய்யப்பட்டு பால நிர்மாண வேலைகள் வீணடிக்கப்படுகிறது.

வீதி அபிவிருத்தி அதிகார சபை மூலமாக மேற்கொள்ளப்பட்ட போதிலும் இதனை பூரணமாக்க முடியாமல் இடை நடுவில் கைவிடப் பட்டமை மக்களை ஏமாற்றமளிக்கிறது. அரசியல்வாதிகளினால் அடிக்கல் நடப்பட்டு மக்கள் அவர்களை அந்த நேரம் மாலை அணிவித்து



பிரமாண்ட வரவேற்பளித்து சந்தோசப்பட்டனர் ஆனால் மூன்று வருடங்கள் கடந்தும் அபிவிருத்தி என்றபோர்வையில் மக்கள் ஏமாற்றப்படுகின்றனர்.

கல்லடி வெட்டுவான் பூவரசந்தீவு மக்கள் அன்றாடம் ஜீவனோபாயமாக கூலித் தொழிலை நம்பியே வாழ்கின்றனர். இவ்வாறு இருக்க இப் பாலம் இடை நடுவில் கைவிடப்பட்டதால் போக்குவரத்து பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. கட்டம் கட்டமாக ஆமை வேகத்தில் இதனை நிர்மாணித்து வந்த நிலையில் தற்போது கைவிடப் பட்டுள்ளன.



இது தொடர்பில் அப் பகுதி பெண் ஒருவர் இவ்வாறு தெரிவித்தார்."இந்த பாலத்தை புனரமைக்காமலே இருந்திருக்கலாம் எங்களுடைய மக்கள் ஆற்றை கடந்தே போயிருக்கலாம் ஆனால் இப்போது எல்லாம் தடைப்பட்டு எங்களை ஏமாற்றுகிறார்கள். இதனை உடனடியாக செய்து தாருங்கள். தேர்தல் காலங்களில் மாத்திரம் பொய் வாக்குறுதிகளை கூறி வாக்குகளை பெற்று வெற்றி பெற்றதன் பின்பு எங்களை ஏமாற்றுகிறார்கள்"



இது போன்ற பாலத்தை புனரமைப்பதனால் கல்லடி வெட்டுவான் பூவரசந்தீவு மக்களின் போக்குவரத்து இலகுவாக்கப்பட்டு பல நன்மை களை மக்கள் பெறுவார்கள் என எதிர்பார்க்கப் படுகிறது .

மக்களின் கனவுகள் ஏமாற்றப்பட்டே வருகிறது காலம் காலமாக மக்களை ஏமாற்றி

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

# இலங்கை தமிழரசுக்கட்சிக்குள் ஏற்பட்டிருக்கும் பனிப்போரும் பதவிப்போட்டிகளும்

இலங்கை தமிழரசுக்கட்சிக்குள் ஏற்பட்டிருக்கும் பனிப்போரும் பதவிப்போட்டிகளும் ஏட்டிக்குப் போட்டியான நிலைமைகளும், பொன்விழாக் காணவிருக்கும் கட்சிக்கு சாவுமணி அடிக்கும் கெடுதியான நிலைமைகள் உருவாகி வருகிறது என்பது தெளிவாகவே தெரிகிறது இந்த நிலைமைகள் ஏற்படுவதற்கு காரணம் என்ன ? என்பதை கண்டு கொள்ள முடியாமல் இருப்பதுதான் கவலை தரு கிறவிடயம்.

பதவி மோகங்கள் கட்சியின் பெறுமதியை புரிந்து கொள்ளாத மக்கள், அர்ப்பணிப்பற்ற ஆதரவாளர்கள், ஆளுமையற்ற தலைமைகள் ஒன்று சேர்ந்தே இன்று கட்சியை பரிநாசம் ஆக்க முற்படுகிறார்கள்.

17 அவது மகாநாடு கடந்த 19 ஆம் திகதி (19.2.2024)நடைபெற இருந்த நிலையில் திருகோணமலை மாவட்ட நீதிமன்றிலும், யாழ்ப்பாண நீதி மன்றிலும், மகாநாட்டுக்கு எதிராக தடை உத்தரவு பெறப்பட்டு மகாநாடு இடை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. பெறப்பட்ட தடை உத்தரவுகள் வெவ்வேறு மாவட்டங்களிலிருந்து பெறப்பட்டாலும் நோக்கம் ஒன்றாகவும் பின்னணி ஒன்றாகவுமே இருக்கிறது என்பது வெளிப் படையாகவே தெரிகிறது.

17 ஆவது மகாநாடு திருமலையில் நடைபெறப்போகிறது என்று அறிவித்தல் வெளியாகிய மறுகணமே அதற்கெதிரான முரண்பட்ட விமர்சனங்களும், கண்டனங்களும் கிளம்பியதற்கான ஆதாரங்கள் உண்டு. உதாரணமாக திருகோணமலை மாவட்டத்தில் மாவட்ட தலைவர் குகதாசன் தலைமையில் இடம் பெற்ற வட்டாராத் தெரிவுகளில் குளறுபடிகளும் ஊழல்களும் இடம்பெற்றிருக்கிறது. மூத்த தலைவரான இரா. சம்பந்தனின் ஆதரவாளர்கள் ஓரம் கட்டப்பட்டிருக்கிறார்கள். கட்சியின் மூத்த உறுப்பினர்கள் உதசீனப்படுத்தப்பட்டிருக்கிறார்கள் என்று முறையிடப்பட்டிருந்தது.

பொதுச்செயலாளர்பதவிக்கு பலர்போட்டியிட விரும்பியபோதும் அதற்கு இடந்தராமல் மத்திய குழுவில் இரண்டொருவர் எடுத்த தீர்மானங்களை பொதுச்சபையில் பலாத்காரமாக திணிக்க முற்படுகிறார்கள்.

பொதுச்செயலாளருக்கான தெரிவை வாக் கெடுப்பை நடத்தாமல், யாப்புக்கு முரணாக நடத்தியிருக்கிறார்கள்.

பொதுச் செயலாளர் பதவியை இரு காலங்களாக பிரித்து இருவருக்கு பகிர்ந்தளிக்க முற்பட்டமை. யாப்புக்கு முரணாக பொது சபைக்கு மேலதிக உறுப்பினர்களை நியமித்து, தலைவர் தெரிவை நடத்தியமை போன்ற பல் வேறு குற்றச்சாட்டுகள் கட்சிக்கு உள்ளேயும் வெளியேயும் முன்வைக்கப் பட்டிருந்தது.

இக்குற்றச்சாட்டுகளை சீர் செய்யாமல் மந்திரத்தால் மாங்காயை விழுத்துவதுபோல் மத்திய குழுவில் எடுத்த தீர்மானத்தை பொதுச்சபை ஏற்கவேண்டும் என்ற தோரணையில் நடந்து கொண்டது போன்ற சம்பவங்கள் நிலைமைகளை மோசமாக்கியிருந்தது.

திருகோணமலை மாவட்டத்தில் தடை உத்தரவை பெற்ற நபர் கட்சியோடு மிக நெருக்கம் கொண்டவர் அல்லர் என்றும், யாரோ ஒரு சிலரின் ஏவல் தன்மையால் இந்த கெடுதியை செய்ய முற்பட்டிருப்பது கவலைக்குரிய விடயமாக பார்க்கப்படுகிறது.

தடை உத்தரவை பெற்றதன் பிரதான நோக்கம் புதிய தலைவர் ஸ்ரீதரனின் தலைமையில் கட்சி இயங்கக்கூடாது என்ற உள்நோக்கத்தின் அடிப்படையிலையே அந்த தடை உத்தரவு பெறப்பட்டிருப்பதுடன் முக்கிய பதவிகளில் தாம் விரும்பியவர்களை உறுதிப்படுத்தி அமர வைப்பதும், இன்னொரு நோக்கமாக இருக்கலாம். இதன் பின்னணியில், சூழ்ச்சியாளர்கள் செய் பட்டிருக்கிறார்கள் என்பது பொது அபிப் பிராய மாக காணப்படுகிறது.



திருமலை நவம்

தந்தை செல்வா இலங்கை தமிழரசுக் கட்சியை ஸ்தாபித்தபோது வட கிழக்கில் வாழும் தமிழ் மக்களின் தேசிய உரிமைகளை வென்றெடுக்கவேண்டும் என்ற தீர்க்கத்துடன் கட்சியை ஆரம்பித்ததோடு அதில் இணைந்து கொண்டவர்கள் தந்தைவழி செயற்பட்ட தலைசிறந்த ஆளுமைகளாகவும், அரசியல் தலைவர்களாக இருந்திருக்கிறார்கள். கோப்பாய் கோமகன் வன்னியசிங்கம், தளபதி அ.அமிர்தலிங்கம், திருகோணமலை இராஜவரோதயம், இராமநாதன், விஜயநாதன், சொல்லின் செல்வர் செல்லையா இராஜதுரை டாக்டர் நாகநாதன் என்ற ஜாம்பவான்கள் கட்சியை ஆராதித்தார்கள். ஆனால் இன்று அந்த நிலை காணப்படவில்லை.



இலங்கை தமிழரசுக்கட்சியின் முதலாவது தேசிய மகநாட்டை தந்தையவர்கள் திருகோணமலையில் நடத்த தீர்மானித்தபோது 1951 ஆம் ஆண்டு தமிழரசுக்கட்சியின் மிக முக்கிய ஆண்டாக அது பிரகடனப்படுத்தப்பட்டது. இம் மகநாட்டில் தந்தை செல்வா தலைவராக தெரிவு செய்யப்பட்டார். திருகோணமலையை மகாநாடு நடத்துவதற்கு தான் தேர்ந்தெடுத்த காரணத்தை தந்தை பகிரங்கமாக தெரிவித்தார்.

திருகோணமலை மக்கள் எமது முன்னோர்களின் மகிமையை காப்பாற்றுவதற்கு தகுதி உடையவர்கள் என்பதை பெருமையுடன் கூறிக் கொள்கிறேன். தமிழ் இனத்தை காப்பாற்றுவதற்கு இங்கிருக்கும், ஆர்வத்தை நான் மெச்சுகிறேன் திருகோணமலை வாலிபர்களின் வீரத்துக்கும் தியாகத்துக்கும் நான் தலைவணங்குகிறேன் என பெருமைப்பட்ட ஊரில்தான் இன்று கட்சியை சிதைத்து சின்னா பின்னப்படுத்த தடை உத்தரவு பெறப்பட்டிருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் பெறப்பட்ட தடை - ஆணையில் மகாநாட்டுக்கு அறிவித்த கால அவகாசம் போதுமானதல்ல, யாப்பின் பிரகாரம் 21 நாட்களுக்கு முன் பொதுச்சபை உறுப்பினர்களுக்கு அறிவித்தல் அனுப்பிவைக்கப்பட்டிருக்க-வேண்டும் என மனுதாரார் குறிப்பிட்டுள்ளார்.

திருகோணமலை நீதிமன்றில் கோரப்பட்ட தடை உத்தரவில் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான இரா.சம்பந்தன் சிபாரிசுக்கு அமைய பொதுச்சபைக்கு 6 உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் இது யாப்புக்கு முரணானது. இது தலைவர் தெரிவில் பாதக நிலையை ஏற் படுத்தியுள்ளது.

பொதுச் செயலாளராக தெரிவு செய்யப் பட்ட திருகோணமலை மாவட்டத்தை சேர்ந்த சண்முகம் குகதாசனுக்குரிய கடமைக் காலத்தை ஒரு வருடமாக குறைத்து மற்றொரு வருடத்தை மட்டக்களப்பு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீநேசனுக்கு வழங்கியிருப்பது தவறு என மனுதாரரான பராராஜசிங்கம் சந்திரசேகரம் சுட்டிக் காட்டி இந்த தடையாணையை பெற்றி ருக்கிறார்.

கட்சிக்கான தலைவர் தெரிவு கடந்த ஜனவரி மாதம் 21 ஆம் திகதி இரகசிய வாக்கெடுப்பின் மூலம் சிவஞானம் ஸ்ரீதரன் தலைவராக தெரிவு செய்யப்பட்டார். ஜனவரி 27 ஆம் திகதி பொதுச்செயலாளர் மற்றும் பதவிகளுக்கான தெரிவு இடம் பெறும் எனவும் 28 ஆம் திகதி 17 ஆவது மகாநாடு நடை பெறும் எனவும் நிகழ்ச்சி நிரல் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. அதன்பிரகாரம் பொதுச்செயலாளர் உட்பட்ட பதவிகளின் தெரிவுக்கு 27 ஆம் திகதி பொதுச்சபை உறுப்பினர்கள் ஒன்று கூடியிருந்தார்கள்.

பொதுச்சபை கூடியபோது புதிய தலைவர் ஒரு பட்டியலை வாசித்துக்காட்டினார். பின் வருவோரை கீழ்க்குறிப்பிட்ட பதவிகளுக்கு மத்திய குழுவின் சிபாரிசுக்கு அமைய நியமிக்கவிரும்புகிறோம் இதை பொதுச்சபை அங்கீகரிக்க வேண்டும் என கோரினார்.

குறித்த பதவிகளுக்கு நியமிக்கும் அதிகாரம் பொதுச்சபைக்குரியதேதவிர மத்திய குழுவுக்கு அல்ல. பொதுச்செயலாளர் பதவி மிக முக்கியமான பதவியாக இருப்பதால் மத்திய குழுவின் தீர்மானத்தை ஏற்க முடியாது பதவியை அறிவித்து வாக் கெடுப்பு நடத்துங்கள்" என்று சபையில் பலர் வாதாடினார்கள்.

இக்குழப்பம் காரணமாக தலைவர் மாவை சேனாதிராஜா பொதுச்செயலாளருக்கான வாக் கெடுப்பு நாளை நடத்தப்படுமென அவசரமாக அறிவித்ததும், சபையிலிருந்தவர்கள் பலர் வெளி யேறினார்கள்.

மதிய இடைவேளைக்கு பிறகு தலைவர்

தொடர்ச்சி 10ஆம் பக்கம்

# பாரபட்சம்

துரைசாமி நடராஜா

மலையகம் தற்போது கல்வித்துறையில் மேலெழும்பி வருகின்றமை பாராட்டத்தக்க விடயமாக உள்ளது. அண்மையில் வெளியான தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை மற்றும் க.பொ.த.சாதாரணதர பரீட்சை பெறுபேறுகள் உட்பட கடந்தகால பெறுபேறுகள் பலவும் இதனை உறுதிப்படுத்துவதாக உள்ளன. இதனிடையே மலையகத்தில் துறைசார்ந்த ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதாகவும் அதிலும் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களை கற்பிக்கக்கூடிய ஆசிரியர்களின் பற்றாக்குறை அதிகமாக நிலவுவதாகவும் கருத்து வெளிப்பாடுகள் இருந்து வருகின்றன.



அண்மையில் இது தொடர்பில் பாராளுமன்றத்திலும் வாத பிரதிவாதங்கள் இடம்பெற்றன. இதேவேளை வெளிமாவட்டங்களைச் சேர்ந்த எந்த மாணவர்களையும் நுவரெலியா மாவட்ட பாடசாலைகளில் உள்வாங்க முடியாது என்ற தீர்மானமும் மலையகத்தில் கணித, விஞ்ஞான ஆசிரியர் பற்றாக்குறையில் கணிசமான செல்வாக்கு செலுத்துவதாகவும் பாராளுமன்றத்தில் கருத்துக்கள் எதிரொலித்தன. இந்நிலையில் மலையக பாடசாலைகளில் துறைசார் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்து மலையகத்தின் கல்வி அபிவிருத்திக்கு மேலும் வலுசேர்க்க வேண்டிய தேவை காணப்படுகின்றது.

'மனிதன் ஒரு சமூக விலங்கு. விலங்கு மனத்தின் வலிசான்றை மனிதனிடம் காணலாம். அதன் ஆதிக்கத்திலிருந்து மனித மனத்தை விடுவிப்பதே கல்வியின் பணி. அதாவது கல்வி என்பது மனிதனின் விலங்கியல் இயல்பூக்கத்தை மாற்றியமைப்பதாகும். மனிதம் மறுக்கப்பட்டு, மனிதனால் உருவாக்கப்படும் பொருட்கள் இன்று முக்கியத்துவம் பெற்று வருகின்றன.



எதிர்கால மனித செயற்பாடுகள் யாவும் பெருமளவில் இயந்திரங்களையே சார்ந்ததாகி விடும். இதனால் மனிதம்சார் பண்புகள் மேலும் சரியத் தொடங்கும்.இவற்றையெல்லாம் நாம் சந்திக்காமல் இருக்க வேண்டுமானால் கல்வி தனது கடமையை அவசரமாக நிறைவேற்ற தன்னைத் தயார் படுத்திக்கொள்ள வேண்டும்' என்பது புத்திஜீவிகளின் கருத்தாக உள்ளது. கல்வியானது கலாசாரத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பயனுள்ள விடயங்களை சமூகத்திற்கு பெற்றுக் கொடுக்கின்றது. மனிதரிடையே மறைந்து கிடக்கும் திறமைகளை வெளிக்கொணர்கின்றது.

இவற்றோடு மனிதநேய உணர்வுகளை ஒவ்வொரு மனித மனத்திலும் உருவாக்குவதில் கல்வியின் பணி மகத்தானது என்பதே உண்மையாகும். தனி மனித, சமூக, குடும்ப, நாட்டின் அபிவிருத்திக்கும் கல்வியின் வகிபாகம் மிகவும் இன்றியமையாததாகும்.

### பகீரதப் பிரயத்தனம்

இத்தகைய சிறப்பு பெற்ற கல்வி சிலருக்கு எட்டாக்கனியாக இருப்பது மிகவும் வருந்தத்தக்க ஒரு விடயமாக உள்ளது. பின்தங்கிய சமூகங்கள் பலவற்றின் கல்வி வாய்ப்புகள் தொடர்ச்சியாகவே மறுக்கப்பட்டு வந்த வரலாறும் உள்ளது. இதனால் அச்சமூகம் ஏனைய சமூகங்களை எட்டிப்பிடிப்பதற்கு பகீரதப் பிரயத்தனத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இதேவேளை கல்வி அபிவிருத்தி பின்னடைவு நிலையானது பின்தங்கிய சமூகத்திற்கும் ஏனைய சமூகத்திற்கும் இடையிலான விரிசலினை விரிவடையச் செய்கின்றது. இது தேசிய நீரோட்டக் கனவை கேள்விக்குறியாக்குவதோடு ஏனைய பல பாதக விளைவுகள் ஏற்படுவதற்கும் உந்துசக்தியாக அமைந்து விடுகின்றது.

இந்த வகையில் மலையக கல்வி நிலை தொடர்பில் நாம் நோக்குகையில், பெருந்தோட்டப் பகுதி மக்கள் கல்வி கற்றுவிடக்கூடாது என்பதில் தோட்ட நிர்வாகங்களும், ஆட்சியாளர்களும் மிகவும் கவனமாக இருந்தனர்.' தமது சொந்த நாட்டிலேயே மிகவும் இழிவான நிலையில் பிறந்து வளர்ந்த தமிழ்க் கூலிக்கு எதனையும் விளங்கிக் கொள்ளக்கூடிய உள ஆற்றல் இல்லை. எனவே அவனை மிஷனரிமாருக்கு பயனுள்ள வகையில் உருவாக்கிக் கொள்ள ஏதுவாக கொஞ்சம் சொல்லித்தந்தால் அதுவே போதுமானது. இந்த அடிப்படையில்தான் தோட்டப் பாடசாலைகள் முக்கியமானவை.எனினும் கொஞ்சம் கூடக்குறைய கல்வியை இவர்களுக்கு வழங்கிவிட்டால் அது இவர்களை தோட்டத் தொழிலுக்கு மட்டுமல்ல வேறு எதற்குமே இலாயக் கற்றவர்களாக்கிவிடும். கல்வி என்பது அவர்களுக்கு பரிச்சயமில்லாத ஆடம்பரப் பொருள்" என்ற வகையிலான கருத்துகளே பெருந் தோட்ட மக்களின் கல்வி தொடர்பாக முன்வைக் கப்பட்டன.



1869 இல் கல்விப் பணிப்பாளராக பதவியேற்ற ஜே.எஸ்.லூரி தனது விசேட அறிக்கையில் இங்கிலாந்தில் தொழிற்சாலை தொழிலாளரின் கல்வியில், தொழிற்சாலை உரிமையாளர்கள் கொண்டிருக்கும் கடப்பாட்டினைப் போன்று தோட்ட நிர்வாகமும் தோட்டத் தொழிலாளரின் கல்வியில் கடப்பாட்டினைக் கொண்டிருக்க வேண்டுமென விதிக்க வேண்டுமென்று விதந்துரை செய்ததனை பல தோட்ட நிர்வாகிகள் ஏற்றுக் கொண்டனர். ஆனால் காலனித்துவ அரசாங்கம் இதைப்பற்றி ஒன்றும் அலட்டிக் கொள்ளவில்லை.எனினும் யாரேனும் தோட்டங்களில் கல்வி வழங்க முன்வந்தால் அவர்களுக்கு நன்கொடை வழங்குவதற்கு சம்மதித்ததாக பேராசிரியர் தை.தனராஜ் தனது நூலொன்றில் சுட்டிக்காட்டுகின்றார்.

இதேவேளை 1940 இல் அரசாங்க சபையில் கல்வியமைச்சராக இருந்த சி.டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கராவின் தலைமையின் கீழ் நியமிக்கப்பட்ட கல்வி மீதான விசேட ஆணைக்குழு 1943 இல் தனது அறிக்கையை சமர்ப்பித்திருந்தது. இலங்கையின் கல்வி விரிவாக்கத்திற்கு இவ்வறிக்கையானது கணிசமான செல்வாக்கு செலுத்தியதாக கூறப்பட்ட போதும், தோட்டப் பாடசாலைகள் பற்றியோ தோட்டத் தொழிலாளர்களின் கல்வி நிலை பற்றியோ இந்த அறிக்கையில் எதுவும் குறிப்பிடப் படவில்லை. இது ஒரு வருந்தத்தக்க விடயமாகும்.

### உலக வங்கியின் மதிப்பீடு

1988 ஆம் ஆண்டு தகவலொன்றின்படி தோட்டங்களில் வாழ்ந்த தமிழ் தொழிலாளர்களில் 40 சதவீதமானோருக்கு எழுதவோ, வாசிக்கவோ தெரியாதிருந்தனர்.எஞ்சியதில் 43 வீதமானோர் ஐந்தாம் வகுப்புடனோ அல்லது அதற்கும் குறைந்த வகுப்பு கல்வியுடனோ படிப்பை நிறுத்திக் கொண்டனர். சுமார் 15 வீதமானோரே 10 ம் வகுப்பு அல்லது 12 ம் வகுப்பு வரை கல்வியைத் தொடர்ந்தனர். பல்கலைக்கழகத்திற்கும் உயர் கல்விக்கும் ஒரு சதவீதமானோர் கூட செல்லவில்லை. இத்தகைய கீழ்நிலைக் கல்வி நிலையானது தொழில் வாய்ப்புகளைப் பெறுவதிலும் தாக்கம் செலுத்தி இருந்தது. 1988 இல் இலங்கையின் பல்கலைக்கழகங்களில் சுமார் 30 ஆயிரம் மாணவர்கள் உயர் கல்விக்காக தம்மை பதிவு செய்திருந்தனர். ஆனால் இதில் தோட்டப் பகுதிகளையும், இந்திய சமூகத்தையும் சார்ந்தவர்களின் எண்ணிக்கை 200 க்கும் குறைவாகவே காணப்பட்டது. எனினும் பின்வந்த காலங்களில் மலையக கல்வியில் மாறுதல்கள் ஏற்பட்டன.



2007 ம் ஆண்டின் உலக வங்கி மதிப்பீடு மலையக கல்வி நிலைமைகளை தெளிவு படுத்தியது. இதன்படி நாட்டின் எழுத்தறிவு வீதம் 92.5 ஆகவிருந்த நிலையில் பெருந்தோட்ட மக்களின் எழுத்தறிவு வீதம் 81.3 ஆகும். இந்நிலையில் பெண்களின் எழுத்தறிவு வீதம் 74.7 ஆகும். முதலாம் தரத்திற்கு சேரும் மாணவர்களில் 58 வீதமான பெருந்தோட்டப் பகுதி மாணவர்களே ஆரம்பக் கல்வியை கற்று முடித்தவர்கள். க.பொ.த.சாதாரண தரத்தில் பயின்று க.பொ.த.உயர்தரத்திற்கு சென்றவர்களின் எண்ணிக்கையும் மிகவும் குறைவா கவேஇருந்தது.

2015 இன் யுனிசெப் அறிக்கையின்படி ஆரம்பநிலை கல்வி வயதெல்லையில் உள்ள பிள்ளைகளில் இரண்டு வீதமானவர்கள் பாடசாலைகளில் இல்லை. ஒன்பது மாகாணங்களில் இது 1.4 சதவீதமாக இருந்த நிலையில் பெருந்தோட்ட மாவட்ட பாடசாலைகளில் இவ்வீதம் மிகவும் உயர்ந்து 9 வீதமாகக் காணப்பட் டது. பெருந்தோட்டத் துறையிலுள்ள பாடசாலை

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# ஈழத்தமிழர் பண்பாட்டு மீளுருவாக்கத்திற்கு ஐ.நா.வின் அனைத்துலக நாட்களைப் பயன்படுத்தப் பழக வேண்டும்

சூ.யோ. பற்றிமாகரன்

- **பெப்ருவரியில் ஐ.நாவின் உலக நம்பிக் கைகளின் ஒருமைப்பாட்டு வாரமும், வானொலிக்கான உலகநாளும், சுற்று லாவை மீளுருவாக்கம் செய்நாளும், சமூக நீதிக்கான உலக நாளும், அனைத்துலகத் தாய் மொழி நாளும்** இடம்பெறுதல் குறித்த சில சிந்தனைகள்

**முன்னுரை**

ஈழத்தமிழர்கள் முதலில் உலகின் மூத்த குடிகள். அடுத்துத்தான் இலங்கைத் தீவில் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதல் தொன்மையும் தொடர்ச்சியுமான இறைமையுடன் இன்றுவரை வாழ்ந்து வரும் உலகின் தேசமக்களில் தொன்மையானவர்கள். பிரித்தானிய காலனித்துவ அரசு 1833ம் ஆண்டில் ஈழத்தமிழர்களின் இறை மையுள்ள அரசுகளான யாழ்ப்பாண அரசையும், வன்னிமை அரசையும் சிங்கள கோட்டே கண்டி அரசுகளுடன் இணைத்து தங்கள் சந்தை இராணுவ நலன்களுக்காக 'ஒரு நாடாக' 'சிலோன்' என்னும் போர்த்துக்கேய மொழியில் வேர்ச்சொல்லை உடைய ஆங்கிலச் சொல்லால் குறிக்கப்படும் அரசை உருவாக்கியது முதல் இன்று வரை 91 ஆண்டுகள் ஈழத்தமிழர்கள் தங்கள் தாயக தேசிய தன்னாட்சி உரிமையின் அடிப்படையில் தங்களுக்கான தமது வரலாற்றுத் தாயகத்தில் பாதுகாப்பான அமைதியுடனான வளர்ச்சிகளுடன் வாழ்வதற்காகச் சனநாயக வழிகளிலும், 1978 முதல் 2009 வரை சீருடை அணிந்த முப்படைகளுடன் கூடிய தங்களுக்கான நடைமுறையரசிலும் 2009 முதல் இன்று வரை மீளவும் சனநாயக வழிகளிலும் போராடிக் கொண்டிருக்கின்றனர். சனநாயக வழிகளில் போராடும் பொழுது உலக மக்களுக்கும் அம் மக்களின் அரசுகளுக்கும் அமைப்புகளுக்கும் ஈழத்தமிழர்கள் தங்கள் வாழ்வியலின் உண்மைகளை நேர்மையுடன் உடனுக்குடன் தெரியப்படுத்தினாலே உலக மக்கள் ஈழத்தமிழர்களின் வெளியகத் தன்னாட்சி உரிமை குறித்த அனைத்துலகச் சட்டங்கள் வழி தங்கள் அரசுகள் மூலமும் அமைப்புகள் மூலமும் உரிய ஏற்புடைமைகளை உரிய நேரத்தில் செய்யுமாறு வலியுறுத்த முடியும்.

இதற்கு ஈழத்தமிழர்கள் ஐக்கியநாடுகள் சபையின் அனைத்துலக நாட்கள், வாரங்கள், ஆண்டுகள் என்பவற்றைத் தங்களுக்கான உலகத் தொடர்பாடலுக்கான வாயில்களாகப் பயன்படுத்தப் பழகுதல் வேண்டும். இந்த வாயில்கள் வழி ஈழத்தமிழர்கள் தாங்கள் உலகின் குடிகள் என்ற தங்கள் உரிமையைப் பயன்படுத்தி உலக மக்களுடனும் அம் மக்களின் அரசுகளுடனும் அமைப்புகளுடனும் சமூக பொருளாதார அரசியல் ஆன்மீகத் தளங்களில் ஏற்படுத்தக் கூடிய தொடர்புகளை ஏற்படுத்திச் சமகால உலகின் நடையறிந்து ஒப்புரவாக வாழ்தல் ஈழத்தமிழர்கள் சனநாயகத்தின் வழி இறைமையை மீளுறப்பத்தி செய்வதற்கு இன்றிய மையாதவொன்றாக உள்ளது. இறைமை என்பது மண்ணின் மேலான உரிமை மட்டுமல்ல அதனைப் பயன்படுத்தி உலக நடையற்றிந்து வாழ்தல் என்கிற கடமையையும் கொண்டுள்ளது. இறைமையைப் பயன்படுத்தி வாழாது விட்டால் இறைமை இருந்தும் இல்லாதவொன்றாகவே காணப்படும்.

ஒத்தறிவான் உயிர்வாழ்வான் என்னும் வள்ளுவரின் நெறிப்படுத்தல் இதனையே வள்ளுவர் திருக் குறளின் 22வது இயலில் ஒப்புரறிதல் என்னும் தலைப்பில் வலியுறுத்தினர். உலக நடையறிந்து வாழாதவர் செத்தாருள் வைக்கப்படும் என

*ஒத்த திவான னுயிர்வாழ்வான் மற்றையான்*
*செத்தாருள் வைக்கப்படும்*

என்னும் 214 வது குறளால் தெளிவுபடுத்தினார். கூடவே தொல்காப்பியரால் " உயர் திணை யென்மனார் மக்கள் சுட்டே " என மற்றைய உயிர்களில் இருந்து மனிதனை உயர் திணையாக உணர்த்தும் இந்த கூடிவாழும் மக்கள் பண்பை வாழ்வில் வரும் வீழ்ச்சிக்கு எழுச்சி தரும் பழங்குடிப்பண்பாகத் தமிழர்கள் கையாள வேண்டும் என்பது வள்ளுவரின் நெறிப்படுத்தல். இதனைச் 'சிட்டிசன்' என ஆங்கிலத்தில் அழைக்கப்படும் 'குடிமை' க்கு வரலாற்றுத் தொடக்கக்காலத்திலேயே வரைவும் விளக்கமும் தந்த திருக்குறளின் 96வது இயலான குடிமையில் வரும்

*வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி*
*பண்பிற் றலைப்பிரித லின்று*



என்ற குறள் தெளிவாக்குகிறது. " வாழ்வில் வீழ்ச்சிகள் வருகின்ற நேரத்திலும் பழங்குடிப் பண்பான மக்களுடன் கூடி வாழும் தலையான பண்பினை விடாது தொடர வேண்டும் என்பது வள்ளுவர் நெறிப்படுத்தல். இதற்கு பண்பாட்டு மீளுருவாக்கத்திற்கான பேரவையொன்று தேவை. ஒவ்வொரு துறையிலும் பண்பாடு உண்டு ஏனெனில் பண்பாடு என்பது மனிதனின் அகவளர்ச்சிக்கான சக்தியளிப்பு. மக்களுக்குச் சக்தி அளித்தலில் கல்வி தேடலாக அமைய எழுகின்ற கேள்விக்கான வழங்கலாகக் கலை அமையும். இந்த அடிப்படையில்தான் ஐக்கிய நாடுகள் சபையும் அதன் கல்வி அறிவியல் பண்பாட்டு அமைப்பான 'யுனெஸ்கோ'வும் அனைத்துலக நாள்கள் மூலமும் வாரங்கள் ஆண்டுகள் மூலமும் கல்வி அறிவியல் பண்பாடு என்ற மூன்று தளங்களிலும் மக்களுக்கு விழிப்புணர்வும் சக்தியும் அளித்து வருகின்றன. இதனை வாயில்களாகப் பயன்படுத்தவதற்குப் பழக்கப்படுத்தும் நோக்கில் பெப்ருவரியில் இடம்பெற்ற அனைத்துலக நாட்கள் வாரங்களைச் சிறிது எடுத்து நோக்குவோம்.

**மதங்களுக்கு இடையான நல்லிணக்க வாரம்**

பெப்ருவரி 1ம் நாள் முதல் 7ம் நாள் வரை உலக மதங்களுக்கிடையான நல்லிணக்க வாரம் இடம்பெற்றது. சிறிலங்கா அரசாங்கமும் அதன் அமுக்கக் குழுக்களாக உள்ள பௌத்த மகாசங்கங்களும் ஈழத்தமிழர்களின் நிலத்தையும் நாளாந்த வாழ்வையும் ஆக்கிரமிப்பதற்கு பௌத் தத்தை பௌத்த பேரினவாதமாக முன்னிலைப் படுத்திச் செயற்படுவது குறித்த உலகளாவிய அக்கறையை இவ்வாரத்தில் ஏற்படுத்தியிருக்க வேண்டும்.

துரதிட்டவசமாக இந்த எண்ணமே ஈழத் தமிழ் அரசியல்வாதிகளிடை இருக்கவில்லை. இனிவரும் காலங்களிலாவது பௌத்தம் தமிழ் பௌத்தமாகவே இலங்கைக்கு வருகைபெற்றது என்ற உண்மையையும் இதனால் தமிழர் தாயகத்தில் பௌத்தத்தின் தொன்மை அடை யாளங்கள் காணப்படுவது தமிழருடைய பண் பாட்டு வரலாற்றுடன் தொடர்பானதே தவிர அதற்கும்சிங்களப் பண்பாட்டுக்கும் தொடர்பிருக்க வில்லை. இந்த உண்மையை இவ்வாரத்தில் உரக்கப் பேசியிருக்க வேண்டும். அவ்வாறே தமிழருடைய மதநம்பிக்கைகளிலும் சாதியம் பெண்ணடிமைத்தனம் சமூகவிலக்குகள் நிறைய இன்றும் மனித உரிமைகளை வன்முறைப்படுத்தும் நாளாந்த வாழ்வியலாக உள்ளது. உண்மையும் நேர்மையுமான முறையில் இவை குறித்தும் இவ்வாரத்தில் பேசப்பட்டாலே சமூகவிடுதலை நோக்கிய பயணம் சிறப்படையும்.

அவ்வாறே இந்தியத் துணைக்கண்டத் தில் இஸ்லாமிய கிறிஸ்தவ மத நம்பிக்கை யாளர்களுக்கும் மற்றைய மத நம்பிக்கையாளர் களுக்கும் இடையிலான உறவாடல்களின் சிறப்புக்கள் வரலாற்றுப் பங்களிப்புகள் பேசப்படாது பௌத்த இந்து மதங்களிடை மதவெறியை வளர்க்கும் அரசியல் சூழ்ச்சியாளர் களின் செயற்பாடுகள் இவ்வாரத்தில் தெளிவாக் கப்பட்டிருக்க வேண்டும். இனியொரு மதவெறி இனஅழிப்பு ஈழத்தமிழர் தாயகத்தில் யாரால் தோற்றுவிக்கப்படுவதற்கான முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டாலும் அதனை முளையிலேயே கிள்ளியெறிவதற்கான மக்கள் அவைகள் அமைக் கப்படல் வேண்டும். ஈழத்தமிழர் தேசிய விடுதலைப்போராட்டம்மக்களின்இறைமைகளை மீளுறுதிப்படுத்தும் எல்லா மக்களதும் வாழ்வின் பாதுகாப்புக்கும் அமைதிக்கும் வளர்ச்சிக்குமான போராட்டமாகவே 31 ஆண்டுகள் வரலாறு படைத்தது.

இந்த உண்மையின் அடிப்படையில் மதநல்லிணக்கம் வளர ஈழத்தமிழர் அரசியல் மதங்கடந்த மனிதாயத்தை நிலைப்படுத்தும் வெளியென்ற உண்மை உலகுக்கு குறிப்பாக இளம் தமிழ்ச் சமுதாயத்துக்குத் தெளிவாக்கப்பட்டு தமிழரை மததேசியவாதத்திற்குள் ஆழ்த்தி தமிழரின் இறைமை மீளுருவாக்கத்திற்கான அரசியலை திசை திருப்பும் எந்தச் செயலும் எவரால் முன்னெடுக்கப்பட்டாலும் அதற்கான எதிர்வினை செய்வதற்கான மதங்கடந்த அரசியலை முன்னிலைப்படுத்தும் பண்பாட்டுப்பேரவைகள் அரசியல் அமைப்புக்கள் கட்டியெழுப்பப்பட வேண்டிய நேரமிது என்பதே இந்த மதங்களுக்கான நல்லிணக்க வாரம் உலகெங்கும் உள்ள தமிழர்களுக்குத் தரும் செய்தியாகவுள்ளது.

**வானொலிக்கான உலக நாள்**
**ஈழத்தமிழர்க்கான சிந்தனைக்குரிய நாள்**

அடுத்து பெப்ருவரி 13ம் திகதிய வானொலிக்கான உலக நாள் வானொலியின் மைய நோக்கான தகவல் வழங்கல், மகிழ்வளித்தல், அறிவூட்டுதல் என்பதில் நூற்றாண்டைக் கடந்த நிலையில் இன்று ஈழத்தமிழரிடையில் இந்தத் தேவைகள் தேசிய நிலையில் இலாபநோக்கற்ற முறையில் எந்த அளவுக்கு நடைமுறைப்படுத்தப்படுகின்றது. என் பதை மதிப்பிடுகின்ற நாளாக, என்ன மாற்றங்களைச் செய்ய வேண்டும் என்று திட்டமிடுகின்ற நாளாக, அதற்கான மனித வலுவும் நிதி வளமும் தொழில்நுட்ப அறிவியல் கருவிகளின் இணைப்பும் புத்திஜீவிகளின் அறிவும் பொதுமக்களின் உறவும் சமூக மூலதனங்களின் பங்களிப்புக்களும் எவ்வாறு

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# மார்வாடி மர்மம்!

மார்வாடி கடையில் பொருள் விலை குறைவாக இருப்பதாக போலியான பிம்பம் கட்டப்பட்டு உள்ளது. அதற்கு பின்னாடி திட்டமிட்ட வணிக சதி உள்ளதை நாம் அனைவரும் அறிந்துகொள்ள வேண்டும்.

மார்வாடி வியாபாரிகள் எந்த தொழிலில் ஈடுபட்டாலும் அதன் மூலாதார பொருளின் விலையை மட்டும் குறைத்து வைத்துவிட்டு அதன் துணைப் பொருட்களின் விலையை உயர்த்தி அதன் மூலமாக லாபம் ஈட்டி தொழிலை முழுதாக தங்கள் வசம் கட்டுபடுத்தி வைக்கின்றனர்.



எடுத்துக்காட்டாக, ஸ்டேஷனரி தொழிலை எடுத்துக் கொள்வோம். அத்தொழிலில் மூலாதார பொருள் எது ? காகித தாள். அதன் துணைப் பொருட்கள் எது? பென்சில், பேனா, ரப்பர் என்று பெரிய பட்டியல் உள்ளது.

சரி, இதில் அவர்கள்காட்டும் வணிக வித்தை என்ன? பேப்பர் விலையை மட்டும் மற்ற எந்தக் கடையிலும் கிடைக்காத அளவிற்கு குறைத்து தருகின்றனர். பேப்பர் வாங்க சென்றவர்கள் மற்ற பொருட்களையும் அங்குதான் வாங்கி கொண்டு வருவர். எனவே ஒன்றில் விட்டு மற்றொன்றில் பிடித்து விடுவர்.

இது மட்டுமல்ல இன்னும் ஏராளமான வித்தைகள் அவர்களிடம் உள்ளது. ஆனால், இதற்கு எல்லாம் பின்னாடி வேறு ஒரு மூலாதார வித்தை உள்ளது. அதான், ஹான்ஸ் வித்தை.

ஒரு மார்வாடி உங்களது ஊரில் கடைத் திறந்தால், உங்களது ஊர் இளம் தலைமுறையின் வாழ்க்கை சீரழிய தொடங்கும் என்பதே வரலாறு. அவர்கள் இரும்பை நம்பியோ, கல்லை நம்பியோ, பேப்பரை நம்பியோ தொழிலில் இறங்குவது இல்லை. ஹான்ஸ் என்ற போதைப் பொருளை நம்பியே முழுசாக களம் இறங்குகிறார்கள்.

வெறும் 10 ரூபாய் மதிப்புள்ள ஹான்ஸ் பாக்கட்டின் கள்ள சந்தை விலை 60 ரூபாயை தாண்டுகிறது. மற்ற பொருள்களின் விலையை



பேராசிரியர்
ஆ. அருள் இனியன்

குறைத்து இந்த ஒரு பொருளில் மொத்தமாக லாபம் ஈட்டி விடுவர். இப்பொருளின் ஒரே ஏகபோக உற்பத்தியாளர்கள் அவர்கள் மட்டுமே என்பதால் இதில் தமிழ் வணிகர்கள் எதிர் நிற்கவே முடியாது.

மேலும், ஒரு நகரத்தின் மொத்த ஹான்ஸ் விற்பனையும் ஒரே ஒரு மார்வடியின் கையில் இருப்பதால், அவர்கள் மட்டுமே இதில் வெற்றியாளர்கள். இதற்காக தான் SP, DSP இல் தொடங்கி கலெக்டர் வரை வட இந்தியர்களை மட்டும் மிக முக்கியமான தமிழக நகரங்களில் திணித்து வியாபாரத்தை வெற்றிகரமாக நடத்துகின்றனர் மார்வாடி மாபியாக்கள்.

உலகையே தன் ஆட்சியின் கீழ் கொண்டு வந்த ஆங்கிலேய அரசால் சீனாவை மட்டும் பல ஆண்டுகளாக அடிமைப்படுத்த முடியவில்லை. அதற்காக அவர்கள் இறுதியாக எடுத்த ஆயுதம் போதை பொருள் வர்த்தகம் தான். சீனாவில் போதைப் பொருட்களை அனுப்பி மெல்ல மெல்ல அந்த நாட்டை அடிமை படுத்தினர். இதுதான் உலகின் பல நாடுகளின் வரலாற்றிலும் நடந்தது. இப்பொழுதும் நடக்கிறது.

இன்று தமிழர் நிலத்தில் நடப்பதும் இந்த போதை பொருள் யுத்தம் தான். மார்வாடி இஞ்சி டீ கடை போடுகிறான் என்றால் அந்த நிமிடமே அந்த ஊரில் இருக்கும் இளம் வயதினரை போதை பொருளுக்கு அடிமைப் படுத்தும் பணியை தொடங்குவர். அதனால், தன்னை சுற்றி அடுத்து அடுத்து நடக்க போகும், வணிக யுத்தம் அந்த இளம் பிள்ளைகளுக்கு தெரியாமலே போய்விடும். எந்த தொழிலிலும் அங்கு தமிழர்கள் இல்லாமல் அழித்து ஒழிக்க படுவர்.

இஞ்சி டீ, செருப்புக் கடை, ஸ்டேஷனரி, இரும்பு கடை, மார்பிள் கடை, டெக்ஸ்டைல் என்று அவர்கள் வரிசைகட்டி நிற்க தொடங்கும் இடம் தான் இஞ்சி டீ கடை.

சேட்டு இஞ்சி டீ கடை தமிழ் வணிகர்களுக்கு ஆபத்தானது என்றால், நம் மண்ணின் இளம் பிள்ளைகளுக்கு பேராபத்து மிக்கது. மார்வாடி தொழிலின் மர்மம் ஹான்ஸ் தான்.

தமிழ்நாட்டை அடிமைப்படுத்த வட இந்திய வியாபாரிகள் மூலமாக இந்திய வல்லாதிக்கம் திட்டம் தீட்டி செயல்பட்டு வருகிறது. SP, DSP, ஆட்சியருக்கு தெரியாமல் தான் ஹான்ஸ் விற்பனை நடக்கிறதா?

**அப்ப.. அப்ப... நடக்கும் ரெய்டு எல்லாம் வெறும் கண்துடைப்பு நாடகம்...**
**இது திட்டமிட்ட இன அழிப்பு யுத்தம்...**
**தமிழர்கள் விழித்து எழுங்கள்...**
**வணிக சண்டையில் இருந்தே எம் இனத்திற்கான விடுதலை சண்டை தொடங்கும்...**

• • •

## பொன் விழாக் ... தொடர்ச்சி ...

மாவை பொதுச் செயலாளருக்கான வாக் கெடுப்பு நடத்தப்படுமென அறிவித்தபோது திரு. சுமந்திரன் குறுக்கிட்டு தலைவரின் அறிவிப்புக்கு எதிராக மத்திய குழு எடுத்த திர்மானத்துக்கே இங்கு வாக் கெடுப்பு நடதப்படுமென அறிவித்தார்.

தீர்மானத்துக்கு அதரவானவர்கள் எதிரான வர்கள் கரங்களை உயாத்தும்படி சபையை கோரினார். வாக் கெடுப்பு நடத்தி திரு. குகதாசன் பொதுச் செயலாளராக தெரிவு செய்யப்பட்டிருக் கிறார் என முடிவை அறிவித்தார்.

இது சபையில் மீண்டும் குழப்ப நிலையை உருவாக்கியது.பலர் தமது இருகரங்களை உயர்த்தி தமது அதரவை தெரிவித்த நிலையில் அது சுமந்திரனால் எண்ணப்பட்டது.

பொதுச்சபையை சேராதவர்கள் சபைக்குள் அத்து மீறி நுழைந்திருந்தனர். அவர்களும் எண்ணிக்கைக்குள் சோக்கப்பட்டார்கள்.

இந்த குழப்பமான சம்பவங்கள் அடிப்படையான பிரச்சனைகளை உருவாக்கிய நிலையில் தலைவர் தவிர்ந்த ஏனைய பதவிகளுக்கான தெரிவுகள் குழப்பத்தில் முடிந்தது.

திரு. குகதாசன் தான்தான் உத்தியோக பூர்வ பொதுச் செயலாளர் என ஊடகங்களுக்கு போட்டி கொடுத்திருந்தார். ஆனால் அவரது நியமனத்தில் ஏற்பட்ட குளறுபடிகளால் அவரை சபை ஏற்றுக் கொள்ளவில்லை கார சாரமான விமர்சனங்கள் முன் வைக்கப்பட்டது.

சட்டத்தரணியான சுமந்திரன் யாப்பு விதிகளுக்கு அமைய வாக் கெடுப்பு நடத்தாமல் தனது நோக்கத்தை தவறான முறையில் நிறை வேற்றியிருக்கிறார். என, பரவலாக விமர்சிக் கப்பட்டது. கடுமையான குழப்ப நிலை கள் ஏற் பட்டது.

கட்சியின் மரபின்படி (யாப்பின்படி அல்ல) தலைவர் ஒருவர் வடக்கை சேர்ந்தவராக தெரிவு செய்யப்பட்டால் பொதுச்செயலாளர் கிழக்குக்கு வழங்கப்படவேண்டும் மறுபுறம் கிழக்கை சேர்ந்தவர் தலைவராக தெரிவு செய்யப்பட்டால் வடக்கை சேர்ந்தவர் செயலாளராக தெரிவு செய்யப்படவேண்டுமென்பது மரபு.

இந்த மரபின் அடிப்படையில் திரு. ஸ்ரீநேசன் பொதுச் செயலாளராக நியமிக்கப்படலாம் என்று எதிர்பார்த்த நிலையில் அதை விரும்பாத சுமந்திரன் தான் விரும்பிய ஒருவரை கொண்டுவர வேண்டும் என்பதற்காக . குகதாசன் தெரிவில் பல குளறுபடிகளை செய்துவிட்டார் என்பது உறுப்பினர்களின் குற்றச்சாட்டு.

தனது நியமனத்தை பெரும்பாலனவர்கள் விரும்பவில்லை என்பதை புரிந்து கொண்ட கககதாசன்ஒரு வாரம்கழித்து தனது கைப்பட பொதுச் செயலாளர் பதவியை ராஜினாமா செய்வதாக கடிதமொன்றை புதிய தலைவர் ஸ்ரீதரனிடம் கையளித்திருக்கிறார். குகதாசனின் ராஜினாமா கடிதத்தை ஏற்றுக் கொண்டால் பொதுச் செயலாளர் பதவிக்கு மீண்டும் தேர்தல் நடத்தவேண்டிவரும் இவ்வாறு நடத்தும் பட்சத்தில் திரு. சுமந்திரன் செயலாளர் பதவிக்கு போட்டியிட்டு தெரிவு செய்யப்பட்டு விட்டால் தனது தலமைப்பதவிகு;கு ஆபத்து வந்துவிடும் என்பதை உணர்ந்து கொண்ட ஸ்ரீதரன் காலங்கடத்தாமல் குகதாசன் மற்றும் ஸ்ரீநேசன் இருவரையும் சந்தித்து ஒரு சமாதான பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார்.

முதல் ஒரு ஆண்டு குகதாசனை பதவி வகிக்கும்படியும் மறு ஆண்டு ஸ்ரீநேசனை பதவிவகிக்கும்படியும் பேச்சுவாh;த்தை நடத்தி அவர்களை சம்மதிக்கவைத்து இருவரிடமும் உடன்பாட்டு கையெழுத்து பெற்றிருக்கிறார். இந் நிலையிலையே 19 ஆம் திகதி (19.2.2024) 17 ஆவது மகாநாட்டை திருகோணமலையில் நடத்துவதற்கு அறிவித்தல் விடுத்த நிலையிலையே எதிராக தடை உத்தரவு பெறப்பட்டிருக்கிறது.

இலங்கை தமிழரசுக்கட்சி பாரம்பரிய முள்ள ஒரு கட்சி. இலங்கையிலுள்ள பழமையான கட்சிகளுக்கு நிகரான கட்சியாக செயற்பட்டு வருவதற்கு அப்பால் தமிழ் மக்களின் தேசிய உரிமைகளை பெறுவதற்காக நீண்ட காலம் தேசியப் போரை நடத்திவரும் ஒரு கட்சி. தந்தை செல்வநாயம் தளபதி அமர்தலிங்கம் இரா. சம்பந்தன் போன்ற தலைவர்கள் கட்சியை வழி நடத்திய விதம் சிங்கள ஏகாதிபதியத்துக்கு எதிராக மேற் கொண்ட போராட்டங்கள் எல்லமே இன்று அர்த்தமற்ற புஸ்வாணமாக போய்விடுமோ என கட்சி ஆதரவாளர்கள் கவலைப்படுகிறார்கள். பவள விழா எடுக்கப்போகும் நேரத்தில் கட்சி பாழாகிவிடப்போகிறதா என பயங் கொள் கிறார்கள். மக்கள்.

• • •

# எதிரிகளைத் தேடி நாடுகடந்து தாக்குதல் நடத்தும் ரஸ்யா

வேல்ஸ் இல் இருந்து அருஸ்

வட அமெரிக்காவில் வசிக்கும் சிறிய குருவி, நீளமான வால், தலையில் சிறிய கொண்டை அதன் பெயர் ரிற்மவுஸ், அந்த பெயரில் ஒரு படை நடவடிக்கை மூலம் ரஸ்யாவுக்கு ஒரு அதிர்ச்சி வைத்தியம் கொடுப்பதற்கு திட்டமிட்டது உக்ரைனின் *GUR* எனப்படும் புலனாய்வு அமைப்பு.

ரஸ்யாவின் வான்படை விமானிகளை முகம்தெரியாத நபர்கள் போல தொடர்புகொண்ட உக்ரைனின் புலனாய்வுப் பிரிவினர் ரஸ்யாவின் விமானங்களை அல்லது நவீன விமானங்களின் தொழில்நுட்ப இரகசியங்களை உக்ரைனுக்கு கொண்டுவந்தால் பல இலட்சம் அமெரிக்க டொலர்கள் சன்மானமாக வழங்கப்படும்



எனவும், பாதுகாப்பாக அவர்களும், அவர்களின் குடும்பத்தினரும் ஐரோப்பாவில் அல்லது அமெரிக்காவில் தங்கவைக்கப்படுவார்கள் எனவும் ஆசை வார்த்தைகள் கூறப்பட்டன.

பல அதிகாரிகள் அதற்கு மயங்காதபோதும், மக்சிம் குஸ்மினோவ் உக்ரைனின் வலைக்குள் வீழ்ந்திருந்தார். ரஸ்யாவின் 15 மில்லியன் டொலர்கள் பெறுமதியான எம்ஐ-8 என்ற இருப்புக்கவச உலங்குவானூர்தியை செலுத்தும் அவர், அந்த உலங்குவார்தியை உக்ரைனுக்கு கடத்திச் செல்வதன் மூலம் 500,000 டொலர்களை சன்மானமாகப் பெறவும், ஐரோப்பிய நாட்டில் உல்லாசமாக வாழவும் விரும்பினார் அந்த 28 வயதான விமானி.

கடந்த வருடம் பெப்ரவரி மாதம் அவருடனான தொடர்புகளை உக்ரைன் புலனாய்வுத்துறை ஏற்படுத்தியது. ஆறுமாதமாக இரகசியமாக திட்டமிடப்பட்டது. அவருக்கு வழங்கப்பட்ட பணி, தரமுயர்த்தப்பட்ட எஸ்யூ-27 மற்றும் எஸ்யூ-30 தாக்குதல் விமானங்களின் உதிரிப்பாகங்கள் மற்றும் தொழில்நுட்ப ஆவணங்களுடன் எம்ஐ-8 உலங்குவானூர்தியை உக்ரைனுக்குள் கடத்திவருவதாகும்.



அதற்கான நாள் கடந்த வருடம் ஆகஸ்ட் 23 ஆம் நாள் என குறிக்கப்பட்டது. உலங்கு வானூர்தி எல்லையை தாண்டும்போது அது உக்ரைனின் வானெதிர்ப்பு படையினரின் அல்லது ரஸ்யாவின் வானெதிர்ப்பு படையினரின் தாக்குதல்களில் சிக்காதவாறு கார்கிவ் பகுதியின் ஊடாக பாதுகாப்பாக பறப்பதற்கான பாதையும் தெரிவு செய்யப்பட்டது.

மேலும் விமான எதிர்ப்பு ஏவுகணைகளில் இருந்து தப்புவதற்காக அது மிகவும் தாள்வாக பறக்கவேண்டும் எனவும் திட்டமிடப்பட்டது. நடவடிக்கைக்கு முன்னர் மக்சிமின் குடும்பம் இரகசியமாக ரஸ்யாவில் இருந்து ஐரோப்பிய நாடு ஒன்றிற்கு நகர்த்தப்பட்டது.

ஆகஸ்ட் 23 ஆம் நாள் மாலை 4.30 மணியளவில் உக்ரைனின் எல்லைக்கு அருகில் உள்ள ரஸ்யாவின் குர்க்ஸ் வான்படைத்தளத்தில் இருந்து புறப்பட்ட உலங்கவானுர்தியில் மக்சிமும், இரண்டு துணைவிமானிகளும் இருந்தனர். விமானத்தின் ரேடியோ கருவிகள் அணைக்கப்பட்டு, இரண்டு ரஸ்ய வான்படைத்தளங்களுக்கு நடுவாக மிகவும் தாள்வாக பறக்க ஆரம்பித்தது உலங்குவானுர்தி.

எல்லையை தாண்டும்போது, துணை விமானிகள் இருவருக்கும் ஏதோ விபரீதம் இடம்பெறப்போகின்றது என்ற அச்சம் தொற்றிக் கொண்டது. அவர்கள் பதற்றமடைந்த அதேசமயம், எல்லையில் இருந்த ரஸ்ய படையினர் தமது துப்பாக்கிகளால் உலங்குவானுர்தியை நோக்கி சரமாரியாக சுட ஆரம்பித்திருந்தனர். இந்த துப்பாக்கி பிரயோகத்தில் மக்சிம் காலில் காயமடைந்திருந்தார் எனினும் உலங்குவார்தியை உக்ரைனின் புலனாய்வுத்துறையினர் குறிப்பிட்ட இடத்தை நோக்கி செலுத்தினார்.




அதேசயம், அவரின் திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து உலங்குவானுர்தியை கைப்பற்றி மீண்டும் ரஸ்யாவுக்கு கொண்டு செல்ல முற்பட்ட இரண்டு துணைவிமானிகளையும் தனது கைத்துப்பாக்கியால் விமானத்திற்குள் வைத்தே மக்சிம் சுட்டுப் படுகொலை செய்திருந்தார்.

விமானம் தரையிறங்கும்போது இரு துணைவிமானிகளும் சடலமாக உலங்குவானுர்திகள்குள் கிடந்தனர். அவர்களின் சடலங்கள் பின்னர் ரஸ்யாவிடம் கையளிக்கப்பட்டபோது இருவரினதும் தலையில் ஒவ்வொரு துப்பாக்கிக் குண்டு பாய்ந்த காயங்களே காணப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

அதன் பின்னர் உக்ரைனில் ஊடகவியலாளர்களை சந்தித்த மக்சிம் தனது வீர தீர செயல்களை அவர்களுடன் பகிர்ந்து கொண்டதுடன், உக்ரைன் வான்படையில் இணைந்து பணியாற்றப்போவதாகவும் தெரிவித்திருந்தார். அவருக்கு 500,000 டொலர்கள் பணம் வழங்கப்பட்டது.

எனினும் பின்னர் அவர் தனது முடிவை மாற்றி ஸ்பெயினுக்கு சென்றிருந்தார். அதாவது உக்ரைனில் தனக்கு பாதுகாப்பு இல்லை என அவர்




உணர்ந்ததால் ஸ்பெயினுக்கு சென்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் நான் எல்லோரையும் மன்னிப்பேன் ஆனால் துரோகிகளை ஒருபோதும் மன்னிப்பதில்லை என ரஸ்ய அதிபர் விளமிடீர் பூட்டீன் அண்மையில் ஒரு ஊடகத்திற்கு தெரிவித்த கருத்தின் பின்னர், மக்சிமை தாங்கள் கண்டறிந்து தண்டனை வழங்கப்போவதாக ரஸ்ய படையினர் ரஸ்யாவின் அரச ஊடகம் ஒன்றிற்கு கடந்த ஒக்டோபர் மாதம் தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையில் திங்கட்கிழமை(19) ஸ்பெயினின் மத்தியதரை கடற்கரை நகரமான விலயோயோசா என்ற நகரத்திற்கு அண்மையான குடியிருப்பு பகுதியில் மக்சிமின் உடல் 12 துப்பாக்கி குண்டுகள் பாய்ந்த நிலையில், அவரின் உடலுக்கு மேலால் கார் ஏறிச்சென்ற அடையாளத்துடன் வீட்டின் கீழ்த்தளத்தில் உள்ள கார் தரிப்பு இடத்தில் இருந்து கைப்பற்றப்பட்டுள்ளது.

முதலில் இரு குழுக்களுக்கு இடையிலான மோதலாகவே ஸ்பெயின் காவல்துறையினர் எண்ணினர் ஆனால் பின்னர் தான் அவர்களுக்கு உக்ரைன் விவகாரம் தெரியவந்தது. அவரின் உடலை அவரின் முன்னாள் காதலி அடையாளம் காட்டியதாக உக்ரைனின் புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

இரு கொலையாளிகளே அவரை கொலை செய்த பின்னர் காரில் தப்பிச் சென்றதாகவும், அவர்கள் சென்ற கார் சம்பவம் இடம்பெற்ற இடத்தில் இருந்து 20 கி.மீ தொலைவில் எரிந்த நிலையில் மீட்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.



இந்த நடவடிக்கையை ரஸ்யாவின் புலனாய்வுப் பிரிவே செய்தாக ஐரோப்பிய தகவல்கள் தெரிவிக்கின்றன. ரஸ்யாவின் புலனாய்வுப் பிரிவு பல நாடுகளில் இவ்வாறான சிறப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த வரலாறுகள் உண்டு.

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# பாகிஸ்தானின் அரசியல் எதிர்காலத்தைக் கேள்விக்குறியாக மாற்றியிருக்கும் தேர்தல் முடிவுகள்

இறுதிப் பகுதி

தமிழில்: ஜெயந்திரன்

### ஒரே ஆற்றில் இரண்டு தடவை யாரும் கால் வைப்பதில்லை

நவீன பாகிஸ்தானின் முக்கிய பிரச்சினை, அதன் பொருண்மியம் சார்ந்ததாகும். மிக உயர்வாக இருக்கும் பணவீக்கம் (29 வீதம்), மொத்த உள்நாட்டு உற்பத்தியை வைத்துப் பார்க்கும் போது, பாதீட்டில் துண்டு விழும் தொகை (9.1 %), மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 36.5 % வெளிக்கடன்கள் என்பவை இவற்றில் முக்கிய விடயங்களாகும். 'செயற்றிறன் அற்ற நிர்வாகம்' என்று இம்ரான் கானின் அரசைக் குற்றஞ்சாட்டுவது ஷரிவின் தேர்தல் பரப்புரைக்குச் சாதகமாக இருந்தது. ஆனால் ஒரு கேள்வி இன்னும் தொடர்ந்துகொண்டே இருக்கிறது. 'இதனை அவர் எப்படிச் சரிசெய்யப் போகிறார்' என்பதே அந்தக் கேள்வி ஆகும்.



ஷரிவின் தேர்தல் பரப்புரைப் பணிமனை ஒரு இலகுவான பாதையைத் தெரிவுசெய்திருந்தது. அதாவது கடந்த காலத்தின் பொருண்மிய வெற்றி களைக் குறிப்பிடுவதாகும். உண்மையில், வேறு பல உட்கட்டமைப்புத் திட்டங்கள் உட்பட, ஷரிவின் ஆட்சியில், 'சீன-பாகிஸ்தான் பொருண்மியப் பாதை' வெற்றிகரமாக ஆரம்பிக்கப்பட்டதுடன், 4-6 வீத பொருண்மிய வளர்ச்சியும் அந்நேரம் பதிவு செய்யப்பட்டது.

ஆனால் இப்போதோ நிறைய விடயங்கள் மாற்றமடைந்துவிட்டன. 2018 இல், இம்ரான் கான் ஆட்சிக்கு வருவதற்கு முதல் தொடங்கப்பட்ட சீன-பாகிஸ்தான் பொருண்மியப் பாதை, நிதி மற்றும் பாதுகாப்புப் பிரச்சினைகளின் காரணமாக அதிகம் நகரவில்லை. தனது பொருண்மிய அபிவிருத்தியை அதிகரிப்பதற்குத் தேவையான நிதிவளம் இப்போது அந்த நாட்டிடம் இல்லை. ஆகவே பன்னாட்டு நாணய நிதியத்திடமிருந்து ஒரு புதிய உதவித்தொகையைப் பெறுவதற்கான பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதே தற்போதைய அரசின் முதலாவது வேலையாக இருக்கும்.



பன்னாட்டு நாணய நிதியத்தின் நிபந்த னைகள் தெளிவானவையாகும். மிகவும் கடினமான கட்டமைப்புச் சீர்திருத்தங்களை நாட்டில் மேற்கொள்ள வேண்டிய தேவை இருக்கிறது.



அவ்வாறான கட்டமைப்புச் சீர்திருத்தங்களின் பெறுபேறுகளைப் பெறுவதற்கு நீண்ட காலம் தேவைப்படும். அவ்வாறான சீர்திருத்தங்கள், வரி அறவிடும் விடயத்தை அதிகமாகப் பாதிக்கும். அதேவேளைசக்தி உள்ளிட்ட முக்கிய பொருண்மிய பிரிவுகளுக்கான பாதீட்டுச் செலவினங்களை அது அதிகமாகப் பாதிக்கும். குடிமக்களுக்கு இவ்வாறான விடயங்கள் மகிழ்ச்சியைத் தரப்போவதில்லை. கடந்த கால வெற்றிகளைப் பற்றி உரையாடும் நேரம் இதுவல்ல என்பதால் நிலைமையைச் சரிசெய்ய ஏதாவது செய்தாக வேண்டும். அதுமட்டுமன்றிப் பன்னாட்டுச் சூழமைவும் கணிசமாக மாற்றமடைந்திருக்கிறது என்பதையும் கவனிக்க வேண்டும்.

### சமகாலத்தில் நண்பர்கள், எதிரிகள்

வெளியுறவுக் கொள்கை தொடர்பான முக்கிய காவிகளில் எந்த மாற்றமும் இல்லை. சீன-பாகிஸ்தான் உறவு பற்றி தற்போது முக்கிய கவலை எதுவும் இல்லை. பாகிஸ்தானின் வெளியுறவுக் கொள்கையைப் பொறுத்தவரையில், சீனாவுடன் அதன் உறவு தொடர்பாக தற்போதைக்கு எந்தக் கவலையும் இல்லை. ஆனால் அதே நேரம் சீனாவைப் பொறுத்தவரையில் பாகிஸ் தானுடன் அதன் உறவு தொடர்பாக பேஜிங் கில் அதிக ஆர்வம் தொடர்ந்து இருக்கும் என்பதை எதிர்பார்க்க முடியாது. இது எவ் வாறிருப்பினும், வர்த்தகம், முதலீடுகள், இரா ணுவக் கூட்டுறவு போன்ற விடயங்கள் தொடரு வதற்கு இஸ்லாமாபாத்திலுள்ள நிர்வாகம் எதிர்வு கூறக்கூடியதும் நிலையானதுமான கொள்கை களைக் கொண்டிருப்பது அவசியமானதாகும்.



இந்தியாவுடனான உறவு தொடர்பில் எதிர்பாராத விடயங்கள் நடைபெறக்கூடிய வாய்ப்புகள் உண்டு. 2019ம் ஆண்டில், ஜம்மு காஷ்மீர் பிரதேசத்தின் விசேட அந்தஸ்தை இந்தியா மீளப்பெற்றுக்கொண்டதுடன், இந்திய-பாகிஸ்தான் உறவு முற்றாக ஓர் உறைநிலைக்குத் தள்ளப்பட்டது. கருத்தியல் காரணங்களுக்காக இவ்விடயத்தில் எந்தவித விட்டுக்கொடுப்பையும் செய்வதற்கு பாகிஸ்தான் தயாராக இல்லை. அதே வேளை தாம் இந்தப் பிரச்சினையைத் தீர்த்துவிட்டதாகக் கருதும் இந்தியாவோ தமது நிலைப்பாட்டில் எந்த மாற்றத்தையும் கொண்டுவர ஆயத்தமாக இல்லை.



இதனை இன்னொரு வகையில் பார்ப் போமானால், முதலில், 1999 இலும் பின்னர் 2015 இலும் புதுடெல்லியுடனான உறவைச் சீர்செய்ய ஷரிவே முயற்சி எடுத்து, பாகிஸ்தான் பிரதமர் இந்தியாவைத் தரிசிப்பதற்கான பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தார். ஆனால் அவரது முயற்சியின் பலனாக ஏற்பட்ட நேர்முகமான மாற்றங்கள் அதிக காலம் நீடிக்கவில்லை என்பதுடன் இரு நாடுகளுக்கும் இடையே மீண்டும் இராணுவ மோதல் ஏற்பட்டது. அவர்களது இருதரப்பு உறவு தொடர்பான முக்கிய விடயங்களில் உடன்பாடு எட்டப்படாத காரணத்தால், இருநாடுகளுக்கும் இடையே இருக்கும் உறவில் ஒரு தற்காலிக முன்னேற்றம் ஏற்படும் வாய்ப்புக் கூட இல்லை.



ஆப்கானிஸ்தான், மற்றும் எல்லைப்புறங் களைப் பொறுத்தவரையில் வரலாற்று ரீதியான ஒரு பிரச்சினை தொடர்ந்துகொண்டேயிருக்கிறது. இந்தப் பிரதேசத்தின் எதிர்காலத்தைக் கட்டுப் படுத்தும் ஆற்றல் சிவில் அரசுக்கு இருப்பதாகத் தெரியவில்லை. பாஸ்த்துன் மக்கள் தொடர்பான விடயங்களில் ஒன்றிய அரசின் தலையீடுகளை விரும்பாத, பாகிஸ்தான் தெஹ்றீக் ஈ தலிபான் என்ற பயங்கரவாத அமைப்பின் தாக்குதல்கள் அங்கே அடிக்கடி இடம்பெறுவதுடன், கைபர் பக்துங்வா மற்றும் பலோச்சிஸ்தான் ஆகிய பிரதேசங்களை எடுத்துக்கொண்டால், அங்கே, ஆப்கானிஸ்தானைத் தலிபான்கள் எவ்வாறு ஆட்சிசெய்கிறார்களோ அவ்வாறே பாகிஸ்தானும் ஆளப்படவேண்டும் என்று இந்தப் பயங்கரவாத குழுக்கள் எதிர்பார்க்கிறார்கள். எனவே அவ்வா றான குழுக்களை இராணுவ ரீதியாகத் தான் கையாள முடியும்.

ஒன்றிய அரசின் கொள்கைகளில் திருப்தியற் றிருக்கும் போராளிகள் மற்றும் பொதுமக்கள் தொடர்பாக எவ்வாறான ஒரு மூலோபாயத்தை ஒன்றிய அரசு கைக்கொள்கின்றது என்பதைப்

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

## பாரபட்சம்... தொடர்ச்சி ...

களிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் 10.5 வீதம் தொடக்கம் 25 வீத மாணவர்கள் இடை விலகுவதாக 2010 ம் ஆண்டு டிரான்ஸ்பேரன்சி இண்டர்நேஷனல் அமைப்பு மேற்கொண்ட ஆய்வின் மூலமாக தெரியவந்தது.

அறிவுப் பொருளாதார மேம்பாட்டிற்கு விஞ்ஞானக்கல்வி பிரதானமானதாகும்.என்ற போதும் விஞ்ஞானக் கல்வியைப் பெற்றுக் கொள்வதில் மலையக மாணவர்கள் இடர் படுகின்றனர். மலையகத்தில் கணித, விஞ்ஞான ஆசிரியர்களுக்கு கடுமையான பற்றாக்குறை நிலவுகின்றது. இந்நிலையில் ஆசிரியர்களை இந்தியாவிலிருந்து வரவழைக்கும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. காலங்காலமாக கல்விநிலை பின்தங்கிக் காணப்பட்டமையால் விஞ்ஞானப் பட்டதாரிகளை உள்ளூரில் பெற்றுக் கொள்ள முடியாதுள்ளது.

மலையகத்தில் 1960 களின் பின்னரே சிறியளவில் க.பொ.த.உயர்தர (கலை) வகுப்புக் கள் ஆரம்பிக்கப்பட்டன. இந்நிலையில் நாடெங் கும் க.பொ.த.உயர்தர விஞ்ஞான வகுப்புகள் விரைவாக ஆரம்பிக்கப்பட்டன.இதனால் 1AB பாடசாலைகளின் தொகையும் நாட்டில் அதிகரித் தது. அதன் உடன் விளைவாக மலையகத்தில் 10 இலட்சம் மக்களுக்கு 21 ,1AB பாடசாலைகள் கிடைக்கப்பெற்றன என்று பேராசிரியர் சோ.சந்திரசேகரன் ஏற்கனவே (2018) வலியுறுத்தி இருந்தார்.

### ஆரம்பக்கல்வி அபிவிருத்தி

மலையகபாடசாலைகள்பலவற்றில்துறைசார்ந்த ஆசிரியர் பற்றாக்குறை, பௌதீக வளப் பற்றாக் குறை போன்றன காணப்படுகின்றன.கஷ்ட மற்றும் அதிஷ்ட பிரதேச பாடசாலைகள் மலைய கத்தில் அதிகமுள்ள நிலையில் இத்தகைய பாடசா லைகள் வேறுபட்ட சவால்கள் பலவற்றையும் எதிர்நோக்குகின்றன.

இப்பிரதேசங்களுக்கு செல்லும் பாதைகள் குண்டும் குழியுமாக காணப்படும் நிலையில் போக்குவரத்து சிரமங்களை ஆசிரியர்கள், மாணவர்கள், பயணிகள் உள்ளிட்ட பலரும் எதிர்நோக்குகின்றனர். குறிப்பிட்ட நேரத்திற்கு பாடசாலைக்கு செல்ல முடியாது ஆசிரியர்கள் சிக்கல்களுக்கு உள்ளாகின்றனர். பயணிகள் பஸ் வண்டிகளும் பாதைச் சீர்கேட்டினால் பழுதடைவதன் காரணமாக அடிக்கடி தனது பணியை இடைநிறுத்திக் கொள்கின்றன. இவற்றுக்கு மத்தியிலும் ஆசிரியர்கள் அர்ப் பணிப்புடன் செயற்பட்டு மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்கு காத்திரமான பங்காற்றி வரு கின்றனர்.



இதன் விளைவாக தரம் ஐந்து, க.பொ.த.சாதாரணதர மற்றும் உயர்தர பெறு பேறுகள் அதிகரித்து வருகின்றன.இதற்கேற்ப ஆரம்பக்கல்வியில் கணிசமான அபிவிருத்தியைக் மலையகத்தில் காண முடிகின்றது. எனினும் இடைநிலை மற்றும் உயர்கல்வித் துறையில் இன்னும் அதீத கவனம் செலுத்த வேண்டிய தேவையுள்ளது. பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிபெறும் மலையக மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படுதல் வேண்டும். இவ்வாறு அனுமதி பெறுபவர்களில் அதிகமா னோர் கணித, விஞ்ஞான பிரிவுகளில் உள்ளீர்க் கப்படுபவர்களாக இருத்தலும் அவசியம்.

மலையக பாடசாலைகளில் கணித மற்றும் விஞ்ஞான ஆசிரியர் பற்றாக்குறை அதிக மாக நிலவும் நிலையில் இது இத்துறையின் அபிவிருத்தியில் தாக்கம் செலுத்துவதாகவுள் ளது. இதனிடையே அண்மையில் பாராளு மன்றத்திலும் இது தொடர்பான கருத்துப் பரிமாறல்கள் இடம்பெற்றன. வெளிமாவட்டங் களைச் சேர்ந்த எந்த மாணவர்களையும் நுவரெலியா மாவட்ட பாடசாலைகளில் உள் வாங்க முடியாது என்ற தீர்மானம் கணித, விஞ்ஞான ஆசிரியர் பற்றாக்குறை மலையகத்தில் நிலவுவதற்கு ஒரு காரணமாகுமென்று இதன் போது முன்வைப்புக்கள் இடம்பெற்றிருந்தன.

வெளி மாவட்டங்களில் 9ஏ சித்திக ளைப் பெற்ற மாணவர்களைக் கூட நுவரெலியா மாவட்டத்திலுள்ள சிறந்த கணித, விஞ்ஞான ஆசிரியர்களை உருவாக்கக்கூடிய பாடசாலை களுக்கு உள்வாங்க முடியாத ஒரு தன்மை அந்த தீர்மானத்தின் மூலம் ஏற்படுத்தப்பட்டதென்று கல்வி இராஜாங்க அமைச்சர் அ.அரவிந்தகுமார் கவலை தெரிவித்திருந்தார். பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீமும் அரவிந்தருமாரின் உரையை நியாயப்படுத்தி பேசி இருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும். திறமையான மாணவர்கள் வந்து நுவரெலியா மாவட்டத்தில் படிக்கின்ற அதேநேரம் அங்குள்ள மாணவர்களின் திறமை யும் அதிகரிக்கும். உண்மையில் இந்த தடையைச் செய்த காரணத்தால் நுவரெலியா மாவட்டத்தில் கூடுதலான மருத்துவபீட அனுமதி கிடைத்தது என்றால் அதனை வரவேற்கலாம்.ஆனால் அப்படி இல்லாமல் இந்த தடையால் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்பதையே கல்வி இராஜாங்க அமைச்சர் சொல்ல வருவதாகவும் ரவூப் ஹக்கீம் குறிப்பிட்டிருந்தார்.

எவ்வாறெனினும் கணிதம் மற்றும் விஞ்ஞானம் போன்றன முக்கியத்துவம் மிக்க பாடங்களாகவிளங்கும்நிலையில்மலையகத்தில் இப்பாடங்களின் அபிவிருத்திக்கு வலுசேர்க்க வேண்டும். அத்துடன் எவ்வகையிலேனும் இப் பாடங்களுக்குரிய ஆசிரியர் பற்றாக்குறையை விரைவாக தீர்த்து வைப்பதும் அவசியமாகும்.

• • •

## கேள்விக்குறி ... தொடர்ச்சி ...

முன்னர் ரஸ்யாவின் புலனாய்வு அமைப் பான கே.ஜி.பியில் இயங்கிய அலக்சாண்டர் லிற்வினற்கொ பின்னர் பிரித்தானியாவுக்கு தப்பி வந்து ரஸ்யாவின் இரகசியங்களை பிரித் தானி யாவின் வெளியக புலனாய்வு அமைப் பான எம்ஜ-6 இற்கு வழங்கி அதனுடன் இணைந்து செயற்பட்ட சமயம் 2006 ஆம் ஆண்டு ரஸ்யாவில் இருந்து வந்த இரண்டு புலனாய்வுப் பிரிவு சிறப்புப் படையினர் பொலோனியம்-210 என்ற கதிரியக்க இரசாயனம் மூலம் அவரை மிலேனியம் விடுதியில் வைத்து படுகொலை செய்த பின்னர் தப்பிச் சென்றிருந்தனர்.

அதன்பின்னர்2018 ஆம் ஆண்டு இரட்டை முகவராக செயற்பட்ட ரஸ்யாவின் சேர்ஜி ஸகிரிப்பல் என்பவர் மீது நரம்பு மண்டலத்தை தாக்கும் இரசாயன தாக்குதல் பிரித்தானியாவின் சலிஸ்பரி கிராமத்தில் வைத்து நிகழ்த்தப்பட்டிருந்தது. எனினும் அவர் ஆபத்தான நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் உயிர் தப்பியிருந்தார்.

இஸ்ரேலின் மொசாட், அமெரிக்காவின் சி.ஐ.ஏ போல ரஸ்யாவின்SVR/KGB என்ற புலனாய்வு அமைப்பும் வெளிநாடுகளில் ஊடுருவி எதிரிகளை படுகொலை செய்யும் வரலாற்றை கொண்டது.



ஆனால் தற்போதைய கொலை என்பது உக்ரைன் மற்றும் நேட்டோவின் நடவடிக்கைக்கு ஆதரவாக இயங்கி ரஸ்யாவில் நாசவேலைகளில் ஈடுபடுபவர்கள் யாரும் எங்கும் தப்பி வாழ முடியாது என்ற செய்தியை சொல்லியுள் ளது.

கடந்த வெள்ளிக் கிழமை(16) ரஸ்யாவின் எதிர்க்கட்சித் தலைவர் ஒருவர் சிறையில் மர்மமான முறையில் மரணமடைந்துள்ள நிலையில் அடுத்த மரணம் நிகழ்ந்துள்ளது. ஆனால் மக்சிம் கடந்த 13 ஆம் நாளே கொல்லப்பட்டுவிட்டார் ஆனால் தற்போது தான் மரணம் தெரியவந்துள்ளதாக ஸ்பெயின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேசயம், கடந்த 2022 ஆம் ஆண்டு மொஸ்கோவில் வைத்து ரஸ்யாவின் புகழ்பெற்ற ஊடகவியலாளரான டறியா டுகினாவை கார் குண்டு மூலம் படுகொலை செய்த உக்ரைன் புலனாய்வுத்துறையின் பெண் உறுப்பினர் ஒருவர் அங்கிருந்து தப்பி ஐரோப்பாவுக்கு தனது குழந்தையுடன் சென்றபோதும் ஐரோப்பாவில் ஆடம்பரவிடுதியில் அவர் சடலமாக மீட்கப் பட்டதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

1976 ஆம் ஆண்டு பொக்ஸ்பற் என நேட் டோவால் அழைக்கப்படும் ரஸ்யாவின் மிக்-25 இடைமறித்து தாக்கும் விமானத்தை கடத்திச் சென்று யப்பானில் தரையிறக்கிய ரஸ்யாவின் விமானியான விக்ரொர் இவனொவிக் பெலன்கொ கடந்த செப்ரம்பர் மாதம் அமெரிக்காவில் இறந்திருந்தார். அவர் இறக்கும் வரையில் அமெரிக்காவில் பாதுகாப்பாக இருந்தது போன்ற வாழ்வு எதிர்வரும் காலத்தில் யாருக்கும் கிடைக்காது என்பதை ரஸ்யா மக்சிமின் மரணம் மூலம் இரட்டை முகவர்களுக்கு உணர்த்தியுள்ளது.

• • •

**ஈழத்தமிழர் ... தொடர்ச்சி ...**

ஈழத்தமிழரின் தேசிய வானொலி ஒன்றின் வழி முன்னெடுக்கப்படலாம் இதற்கு இன்று குரலற்ற ஈழத்தமிழர்களின் குரலாக உலகை வானலையில் வலம் வரும் உயிரோடைத் தமிழ் சமுக ஊடகத்தை ஈழத்தமிழரின் எதார்த்த வாழ்வை வெளிப்படுத்தும் இலக்கு வாராந்த மின்னிதழை எவ்வுhறு ஈழத்தமிழர்கள் இவற்றின் தேசநிர்மாணத்திற்கு உதவ முடியும் என்பதைக் குறித்த ஆர்வத்தைக் கவனத்தை மக்களிடை உருவாக்கும் நாளாக இந்த வானொலி நாள் ஒவ்வொரு ஆண்டும் அமைதல் ஈழத்தமிழர்களுக்காக பொதுக்கருத்துக்கோளத்தை அவர்கள் உருவாக்குதற்கான பலத்தை அளிக்கும்.

### சுற்றுலாவை அதன் உண்மைநிலைக்கு மீள் கட்டமைத்தல் நாள்

தொடர்ந்து பெப்ருவரி 17ம் நாள் உலக சுற்றுலாவை மீள்வலுப்படுத்தல் நாள் இடம் பெற்றது. சுற்றலாத்துறை உலகின் மக்கள் தொடர்பாடலுக்கான மிகப்பெரிய வர்த்தகத்துறையாக விளங்குகிறது. இந்நிலையில் சுற்றுலாவை அதன் உண்மைநிலையான இயற்கையுடன் மனிதன் உறவாடி உள்ள உடல் பலத்தையும் உலக நட்பு வட்டத்தையும் வளர்ப்பதற்கு முன்னுரிமை கொடுக்கப்பட்ட நிலையிலேயே ஐக்கிய நாடுகள் சபையின் பொருளாதாரத்தின் நிலைபேறான மாற்று வழிகளுக்குப் பலமளிக்கக் கூடிய வகையில் நவீனப்படுத்தல் மூலமான சுற்றுலா வர்த்தகம் முன்னெடுக்கப்படல் வேண்டும். என்பது இந் நாளின் மைய நோக்கு.

ஈழத்தமிழர்களைப் பொறுத்த வரை அவர்களின் சுற்றுலாப்பகுதிகள் படைபல குவிப்புக்கும் சிங்கள பௌத்த பேரினவாத நோக்குகளை வளர்ப்பதற்கும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதனை எவ்வாறு உலகச் சுற்றுலாப் பயணிகளுக்கு எடுத்துரைத்து அதன்வழி அவர்களின் ஆதரவை மக்களின் மத்தியில் இருந்து முகாம்களின் இராணுவ நீக்கலுக்கும், ஈழத்தமிழர்களும் சுற்றலாத்துறையினைச் சுதந்திரமான முறையில் வளர்ப்பதற்கு பயங்கரவாத எதிர்ப்புச் சட்டங்கள் என்ற பெயரில் மக்களதும் பொருட்களதும் சுதந்திரமான நகர்வுகள் மறுக்கப்பட்டு வருவதை மாற்றவதற்கும் உலக மக்கள் அவர்களது எதிர்வினைகள் மூலம் உதவலாம் என்பதை சுற்றலாப் பயணிகளுக்கும் சுற்றுலா முகவர்களுக்கும் பரப்புரை செய்யும் அவைகளைத் தோற்றவிக்க முயற்சிக்கும் நாளாக இந்நாளை வருங்காலத்தில் அமைத்தல் சிறப்பாக இருக்கும்.

### சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்னும் நிலை சமுக நீதிக்கான முன்நிபந்தனை

அடுத்து பெப்ருவரி 20ம் நாள் சமுகநீதிக்கான உலக நாள். இந்நாளில் அனைத்துலக, தேசிய, மற்றும் மாகாண நிலைகளில் எல்லா விடயங்களிலும் சமுக நீதி மையமாக அமைவதை நோக்காக் கொண்டு எதனையும் செய்யும் போக்கு வளர்க்கப்படல் வேண்டும் என்பது ஐ.நா.வின் நெறிப்படுத்தலாக உள்ளது. முதலில் சமுக நீதி என்பது சாதி மத மொழி பிரதேச நிற வெறிகள் அற்ற வேறுபாடுகளை மதித்து அவற்றில் உள்ள விழுமியங்களைப் போற்றி வாழப்பழக்குகின்ற சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற நீதியை முதன்மைப்படுத்தும் முறைமை. சிறிலங்கா ஆட்சியாளர்கள்சட்டத்தின் முன்அனைவரும்சமம் என்பதை நடைமுறையில் ஏற்காத ஆட்சியாளர்கள் என்ற வகையில் சிறிலங்காவில் சமுகநீதி என்பது சிங்கள பௌத்தர்கள் அல்லாதவர்களுக்கு நடைமுறையில் கிடையாது என்ற உண்மையை உலகுக்கு உணர்த்தும் நாளாக ஈழத்தமிழர்கள் இதனை முன்னெடுத்தல் அவசியம்.

### பன்மொழிக் கல்வி தலைமுறைகளுக்கிடையான கல்விக்கும் கற்றலுக்கும் தூண்கள்

இறுதியாக அனைத்துலகத் தாய்மொழி நாள் என்பது இவ்வாண்டு " பன்மொழிக் கல்வி தலைமுறைகளுக்கிடையான கல்விக்கும் கற்றலுக்கும் தூண்களாக உள்ளன" என்ற மையப்பொருளில் கட்டமைக்கப்படுகிறது. அதாவது மொழியின் நவீனமயப்படுத்தல் என்பது பன்மொழிப்புவமை வழியானது என்ற நிலையில் தாய்மொழிக் கல்வியையும் நவீனப்படுத்தி வழக்கு மொழியாக நாட்டில் உள்ள மொழிகளுடன் சமமாக இணைப்பதன் வழியாகவே தாய்மொழி புலத்தில் அழியாது காக்கலாம் என்பதையே இவ்வாண்டு அனைத்துலகத்தாய்மொழி நாள் எடுத்துரைக்கிறது.

எனவே தமிழர்கள் அனைத்துலகத் தாய்மொழி நாளை தமிழ்மொழிக்கல்வியை எவ்வாறு நவீன மொழிகள் கற்பிக்கப்படும் முறைகளுக்கு தரம் உயர்த்துவது குறிப்பாகத் தொழில்நுட்ப அறிவியல் கருவிகள்வழியானதமிழ்க்கற்பித்தலை வளர்ப்பது. உதாரணமாக செயற்கை நுண்ணிறிவு சமகாலக் கல்வியில் தலையான கல்வி முறையாக மாறிக் கொண்டிருக்கும் நேரத்தில் தாய்மொழிக்கல்வியை எவ்வாறு இந்த பேரெழுச்சியுடன் இணைப்பது போன்றனவும் தமிழ்க்கல்விக்கு பொருளாதாரப் பலத்தை எவ்வாறு அளிப்பது என்பதும் தமிழைப் பயன்படுத்தும் பொழுது எவ்வாறு பயன்படுத்துபவர் தனக்கான பொருளாதாரத்தைப் பெறுவது என்புதும் தமிழ்மொழி புலத்தில் தொடர்ந்துவாழ்வதற்குமட்டமல்லதமிழகத்திலும் ஈழத்திலும் நிலைத்து வாழ்வதற்கும் தேவையாக உள்ளன.

***முடிபுரை :***

ஐக்கிய நாடுகள் சபையின் அனைத்துலக நாட்கள் வாரங்கள் அதன் திட்டமிட்ட கல்வி கலை அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கான அறிவிப்புக்கள். ஆனால் அதனை அரசியல் மயப்படுத்தி ஐக்கிய நாடுகள் சபையின் பிரச்சினைகளைத் தீர்க்க இயலாத தன்மையுடன் நோக்கி இவை எமக்குத் தேவையில்லை என்று வாழ நினைப்பது தனிமைப்படுத்தும் செயலாகவும் பாழாக்குதலை அடைதலுக்கான வழியாகவும் அமையும். எனவே ஒவ்வொருது றைசார் நிலையிலும் ஈழத்தமிழர்கள் புத்திஜீவிக ளின் அவைகளை உருவாக்கி அதன் வழியான ஈழத்தமிழர் புத்திஜீவிகள் பேரவை ஒன்றைக் கட்டியெழுப்பி எதிர்காலத்தில் ஐக்கிய நாடுகள் சபையினதும் புனெஸ்கோவினதும் நோக்கு கள் நெறிப்படுத்தல்களின் பயன்களை ஈழத்தமிழர் குளுடன் இணைக்க முயற்சிப்பது சமகாலத்தின் தேவையாக உள்ளது.

• • •

---

**சமூகஊடக ... தொடர்ச்சி ...**

அனுப்பிவைப்பதும் ஏற்றுக்கொள்ள முடியாதவை என்றுதான் சொல்ல வேண்டும்.

**இது மக்களுடைய கருத்துச் சுதந்திரம், சிந்திக்கும் சுதந்திரன், கருத்துக் களைப் பகிர்ந்து கொள்வதற்கான உரிமை என அனைத்தையும் மீறுவதாகக் கூறுகின்றீர்கள். இவ்வாறான ஒடுக்குமுறை மக்களுடைய கிளர்ச்சி ஒன்றுக்கு தூண்டுவதாக அமைந்துவிடாதா?**

நிகழ்நிலைக் காப்புச் சட்டம் இப் போது நடைமுறைக்கு வந்திருக்கின்றது. இன்னுமொரு சட்டம் விரைவில் நடைமுறைக்கு வரவிருக்கின்றது. அது பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம். எம்மைப் பொறுத்தவரையில் இந்த இரண்டுமே பயங்கரவாதச் சட்டங்கள்தான். அரச பயங்கரவாதத்தை மறைப்பதற்காகக் கொண்டு வரப்படுகின்ற இந்தச் சட்டங்களும் பயங்கரவாதச் சட்டங்கள்தான். அரசாங்கத்தின் - ஆட்சியாளர்களின் பயங்கரவாத முகத்தை இது வெளிப் படுத்தியிருக்கின்றது.

இதற்கு எதிராக இப்போதே பல்வேறு எதிர்க்கட்சிகள், சமூக செயற்பாட்டளர்கள், சமூக அமைப்புக்கள் தங்களுடைய எதிர்ப்புக் களைத் தெரியப்படுத்தியிருக்கின்றன. இதனைவிட சர்வதேச நாடுகள் தமது எதிர்ப்பைத் தெரிவித்திருக்கின்றன. மனித உரிமை அமைப்புக் கள் தமது கரிசனையை வெளிப்படுத்தியிருக் கின்றன. இவர்களுடைய எந்தவொரு கருத்தை யும் செவிமடுக்காமல் சட்டமூலத்தைக் கொண்டு வந்திருக்கின்றார்கள். இப்போது இந்த சர்வதேச கண்டனங்கள், கருத்துக்களுக்கு அரசாங்கம் எவ்வாறு முகங்கொடுக்கப் போகின்றது என்பதை சமூக ஊடகச் செயற்பாட்டாளர்கள் அவதானித்து க்கொண்டிருக்கின்றார்கள்.

அதேவேளையில், இதில் திருத்தங்கள் சிலவற்றை நாடாளுமன்றத்தின் மூலமாகத் திருத்தப்போவதாக அரசாங்கம் இப்போது கூறுகின்றது. இந்தத் திருத்தம் எந்தவகையில் நடைபெறும் என்பது தெரியாது. ஆனால், இதற்கு எதிராக மக்கள் மத்தியில் பாரிய எதிர்ப்பு அலை ஒன்று உருவாகும். அந்த எதிர்ப்பு அலை எந்த வடிவத்தில் உருவாகும் என்பதுதான் கேள்வியாக இருக்கின்றது. ஏனெனில், இந்த வடிவத்தைத் தீர்மானிப்பது அரசாங்கமாகத்தான் இருக்கும். நாங்கள் போராட்டக்காரர்களாக இருக்கின்றோம். ஆனால், அந்தப் போராட்ட வடிவத்தைத் தீர்மானிப் பவர்களாக ஆட்சியாளர்களே இருப்பார்கள்.

**இது விஷேடமாக தமிழர்களுக்கு எவ்வாறான பாதிப்பை ஏற்படுத்தும்?**

இது நிச்சயமாக தமிழ் மக்களுக்கு பாரிய பாதிப்பை ஏற்படுத்தும். ஏனென்றால், ஏற்கனவே கடந்த 30 வருடகாலமாக போரினால் பாதிக்கப்பட்ட மக்கள், தங்களுடைய உரிமைகளை இழந்த மக்கள், தங்களுடைய காணிகளை இழந்த மக்கள் போராடிக்கொண்டிருக்கின்றார்கள். இது ஒன்று.

இரண்டாவதாக, இந்து மதக் கோவில்கள் ஆக்கிரமிக்கப்பட்டுக்கொண்டுள்ளன. மறுபுறம் பௌத்த விகாரைகள் உருவாகிக்கொண்டுள்ளன. உருவாக்கப்பட்டும் உள்ளது. இவை தொடர்பாக போராட்டங்கள் இடம்பெறும் போது அவை ஒரு சமயத்துக்கு எதிரான போராட்டம். மத ரீதியான கிளர்ச்சியை ஏற்படுத்தும் என்ற ஒரு தோற்றப்பாட்டை இவர்கள் கொடுத்து, அந்தப் போராட்டங்களை அந்தப் போராட்டங்களை ஏற்பாடு செய்பவர்கள், அது தொடர்பான கருத்துக்களை வெளியிடுபவர்களை இவர்கள் இந்தச் சட்டத்தின் கீழ் குற்றவாளிகளாக்கலாம். இதுவரையில் பயங்கரவாத தடைச் சட்டத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள், இப்போது நிகழ்நிலைக் காப்புச் சட்டத்தினால் பாதிக்கப்படலாம்.

இதனைவிட தொல்லியல் திணைக்களம், மற்றும் பௌத்த பிக்குகளின் ஆக்கிரமிப்புக்களை எதிர்க்கின்ற போது அவையும் சமயத்துக்கு எதிரான ஒன்று எனக்கூறி இவர்களை சிறையில் அடைக்க முடியும்.

• • •

# ஐரோப்பிய ஒன்றிய முன்றலில் நடைபெற்ற தமிழீழ தனியரசு நீதிக்கான போராட்டம்




9ம் நாளாக தமிழின அழிப்பிற்கு நீதி கேட்டு பயணிக்கும் மனித நேய ஈருருளிப்பயண செயற்பாட்டாளர்கள்.

மனித உரிமைகள் ஆணையகத்தின் 55 வது கூட்டத்தொடரில் சிறிலங்கா பேரினவாத அரசினால் திட்டமிட்டு நடத் தப்படுகின்ற தமிழின அழிப்பிற்கு அனைத்துலக சுயாதீன விசாரணையை நடத்தக் கோரியும் தமிழீழமே தமிழர்களுக்கான நிரந்தரத் தீர்வு என் பதனை வலியுறுத்தியும் யேர்மனி லண்டோ என்னும் இடத்தில் இருந்து இன்று (23.02.2024) 08:00 மணியளவில் அகவணக்கத்துடன் ஈரு ருளிப்பயணமானது ஆரம்பமாகி பயணித்து லண்டோ நகரசபையில் சந்திப்பினை தொடர்ந்து கால்சூவ நோக்கி பயணிக்கின்றது

தமிழர்களுக்கெதிரான தாங்கொணா அடக்குமுறைகள், இன்னல் களினால் பிறப்பெடுத்த தமிழீழப் விடுதலைப் போராட்டம் பல்லாயிரம் மாவீரர்களினதும் தமிழ் மக்களினதும் தியாகத்தினால் உயர்நிலைக்குச் சென்று, 2009 இல் நடந்த திட்டமிட்ட இனவழிப்புப் போருக்குப் பின்னும் அறவழிப்போராட்டமாக தொடர்ந்து நடைபெற்றுவருகின்றது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப்பேரவையின் 55ஆவது கூட்டத்தொடரினை முன்னிட்டு, தமிழின அழிப்பிற்கு எதிராக, உணர்வெழுச்சியுடன் அனைத்துல நீதி வேண்டி விடுதலை நோக்கி வீறுகொண்டு அறவழியில் இப்போராட்டம் பயணிக்கின்றது.

தமிழர்கள் இவ்வாறான தொடர்ச்சியான அறவழிப்போராட்டங்களை முன்னெடுப்பதனூடாக, எமது விடுதலையை தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களின் வழிகாட்டலில், எமது தமிழீழ மண்ணை மீட்டு, சுதந்திரமாக வாழ முடியும். இச்சூழமைவில் காலத்தின் தேவை அறிந்து நாம் செயலாற்ற வேண்டும்.

இந்த அறவழிப்போராட்டமானது 04.03.2024 அன்று ஜெனிவாவைச் சென்றடையவுள்ளது.

எம் தமிழ் உறவுகளே!

தமிழின அழிப்பிற்கு உள்ளாக்கப்பட்டு நிர்க்கதியான நிலையில் ஏதிலிகளாக வாழும் நாம், அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்தில் சிங்களப் பேரினவாத அரசினை நிறுத்தி தமிழின அழிப்புக்கு நீதி வேண்டும் என்பதையும் தமிழீழமே தமிழர்களுக்கான நிரந்தரத் தீர்வு என்பதையும் உறுதியாக வலியுறுத்த முடியும்.

எனவே இப்போராட்டங்களுடன் அனைவரும் இணைந்து ஓரணியாய் முரசறைவோம்.

"காலத்திற்கேற்ப வரலாற்றுக் கட்டாயத்திற்கமைய போராட்ட வழிமுறைகள் மாறலாம் ஆனால் போராட்ட இலட்சியம் மாறப்போவதில்லை" -தமிழீழத் தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன்-

"தமிழரின் தாகம் தமிழீழத்தாயகம்."













## பாகிஸ்தானின்... தொடர்ச்சி ...

பொறுத்தே அந்தப் பிரதேசத்தின் நிலைமைகளைச் சீர்ப்படுத்துகின்ற இராணுவ ரீதியிலான நடவடிக்கைகளின் வெற்றி தங்கியிருக்கிறது, இங்கு சிவில் தலைமைத்துவமாக இருந்தாலென்ன அன்றேல் இராணுவத் தலைமைத்துவமாக இருந்தாலென்ன ஆப்கானிஸ்தான்-பாகிஸ்தான் எல்லைப்புறம் தொடர்பாக ஒரு உடன்பாட்டை எட்டுவதற்கும், காபுல் அரசுக்கு பன்னாட்டு அங்கீகாரத்தைப் பெற்றுக்கொடுப்பதற்குமான புறச்சூழல்களை உருவாக்குவது தொடர்பான பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதும் ஆகும்.

இஸ்லாமாபாத்துக்கும் மொஸ்கோவுக்குக் இடையேயான உறவை உற்றுநோக்கும் போது, ஆப்கானிஸ்தான் தொடர்பாக பாகிஸ்தானின் கொள்கைகளை மொஸ்கோ மிகவும் உன்னிப்பாக அவதானித்து வந்திருப்பதுடன், பாதுகாப்புடன் தொடர்புபட்ட பல விடயங்களில் உரையாடல்களையும் ஊக்குவித்துவருகிறது. அந்த வகையில் இந்த உறவில் அதிக மாற்றம் ஏற்படுவதற்கான வாய்ப்பு இல்லை. ரஷ்யாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே 2014ம் ஆண்டிலிருந்து அவதானிக்கப்பட்டு வந்த நேர்முகமான மாற்றங்கள் 2022ம் ஆண்டு பெப்பிரவரி 23-24இல் இம்ரான் கான் அங்கு மேற்கொண்ட பயணத்தைத் தொடர்ந்தும், உக்ரைனில் ரஷ்யா போரைத் தொடங்கியதிலிருந்தும் சற்றுத் தொய்வைச் சந்தித்திருக்கிறது. குறிப்பிடத்தக்க பின்னடைவுகள் எதுவும் இந்த உறவில் ஏற்படாத போதிலும், குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் எதுவும் ஏற்படவில்லை என்பது கவனிக்கத்தக்கது.

மேற்குலகுடன் மீண்டும் உறவை ஏற்படுத்த வேண்டிய நிலையில் இருக்கும் புதிய அரசின் தேவையினால் நிலைமை இன்னும் சிக்கலாக்கப்பட்டுள்ளது. இவை எவ்வாறிருப்பினும், தென்பூகோளத்திலுள்ள பல நாடுகளின் முன்னுதாரணங்களை குறிப்பாக இந்தியாவை உற்றுநோக்கும் போது, ரஷ்யாவுடனும் அதே நேரம் மேற்குலகுடனும் சமகாலத்தில் உறவைப் பேணுவது சாத்தியம் எனத் தெரிகிறது. இவ்வாறான நிலைமை உண்மையில், எல்லாத் தரப்புகளுக்கும் சாதகமானதாகும்.

**முற்றும்**

**நன்றி: *https://www.rt.com/news***

## பயனாளிகளுக்கு... தொடர்ச்சி ...

நிர்மாணிப்பு பணிகளுக்கு செலவிப் பவுண்ஷேன் 60 வீத நிதியினையும், வன்னி ஹோப் நிறுவனம் 30 வீத நிதியினையும் 10 வீத நிதி யினை பயளாளிகளின் பங்களிப்புகளில் நிர்மாணிக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கிழக்கு மாகாண முதலமைச்சு செயலகத்தின் திட்டமிடல் பணிப்பாளரும் கிழக்கு மாகாணஆளுநரின் இணைப்புச் செயலாளருமான ஏ.எஸ்.எம். பாயிஸ் அவர்களும், சிறப்பு அதிதியாக திருகோணமலை மாவட்ட சிவில் சமூக அமைப்புகள் கூட்டமைப்பின் தலைவர் டாக்டர் ரவீச்சந்திரன் அவர்களும் கலந்து சிப்பித்ததுடன் மக்கள் சேவை மன்றத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள், அதன் உத்தியோகத்தர்கள், பயனாளிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டர் என்பது குறிப்பிடத்தக்கது.

## பொதுமக்களின் ... தொடர்ச்சி ...

மக்களிடம் கருத்துமாற்றங்களை ஏற்படுத்துவதில் அல்லது அவர்களிடம் எதிர்மறையான விடையங்களை கொண்டு செல்வதில் சமூகவலைத்தளங்கள் முன்னிலை வகிக்கின்றன. உள்ளூர் சுயாதீன ஊடகங்களுக்கு நாம் அதிக நிதி உதவிகளை செய்திருந்தோம்.

எமது ஊடகங்கள் மறுசீரமைக்கப்பட வேண்டும் அதில் பல மாற்றங்களை கொண்டு வருவதுடன், பல கட்டுப்பாடுகளும் விதிகளும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என அவர் வழங்கிய நேர்காணலில் தெரிவித்துள்ளார்.

2023 ஆம் ஆண்டு ஜூன் மாதம் கனேடிய அரசு நிகழ்நிலை காப்புச்சட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தியிருந்தது. அதன் பிரகாரம் சமூகவைலத்தளங்கள் மற்றும் தேடுதல் தளங்கள் அரசுக்கு குறிப்பிட்ட அளவு தொகையை செலுத்த வேண்டும் என தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் அதனை தொடர்ந்து கனேடிய அரசின் செய்திகளை வெளியிடுவதை பல சமூகலைத் தளங்கள் தவிர்த்திருந்தன.

## சமூகவலைத்தள ... தொடர்ச்சி ...

நீக்கியதாகவும் ருவிட்டர் அதிகாரிகள் கடந்த வியாழக்கிழமை(22) தெரிவித்துள்ளனர்.

எனினும் எந்த பதிவகளை அவர்கள் நீக்கினார்கள் என்ற விபரங்களை வெளி யிடவில்லை. இந்தியாவின் இந்த செயற்பாடு மக்களின் கருத்துச் சுதந்திரத்தை மீறும் செயல் எனவும், மேற்கத்திய சமூகவலைத்தளங்கள் மீது இந்தியா கடுமையான அழுத்தங்களை தொடர்ந்து பிரயோகித்து வருவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தியாவில் தமது சமூகவலைத்தளங்கள் தடை செய்யப்படுவதாகவும், பதிவுகள் அகற்றப்படுவது அல்லது மட்டுப்படுத்தப்படுவதாகவும் பலர் முறைப்பாடகளை தெரிவித்து வருகின்றனர்.

இந்திய தலைநகரில் இருந்து 200 கி.மீ தொலைவில் ஆயிரக்கணக்கான விவசாயிகள் போரட்டங்களில் ஈடுபட்டுவருகின்றனர். இந்திய காவல்த்துறையினர் அவர்கள் மீது கண்ணீர்ப்புகை குண்டுகளை வீசி மற்றும் தடைகளை ஏற்படுத்தி தாக்குதல்களை நடத்துகின்றபோதும் அவர்களின் போரட்டத்தை கலைக்க முடியவில்லை.

## எதிர்த்தாக்கு ... தொடர்ச்சி ...

அண்மைக்காலமாக அதிகரித்து வருகின்றன.

இந்த விசாரணைகளில் இஸ்ரேல் நேரிடையாக பங்குபற்றாதபோதும் நீதிமன்றத்தின் தலையீடு குடி யேற்றங்கள் தொடர்பிலான பேச்சக்களில் பாதிப்பை ஏற்படுத்தும் என இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

இந்த விசாரணைகள் தொடர்பிலான தீர்ப்பை வழங்குவதற்கு நீதிமன்றத்திற்கு ஆறு மாதங்கள் செல்லலாம் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## பிரித்தானியா ... தொடர்ச்சி ...

படை நடவடிக்கையை தொடர்ந்து ரஸ்யா மீது பிரித்தானியா பொருளாதார தடைகளை வித்திவருவதுடன் ரஸ்யாவின் பொருட்களுக்கான வரியையும் 35 விகிதமாக உயர்த்தியிருந்தது. மேலும் உக்ரைனக்கு நிதி மற்றும் ஆயுத உதகிவிகளையும் வழங்கி வருகின்றது. அதற்கு பதிலடியாகவே ரஸ்யா இந்த முடிவை எடுத்துள்ளதாக ரஸ்ய தரப்பு தகவல்கள் தெரிவித்துள்ளன.

பிரித்தானியாவின் மிகவும் பிரபலமான மீனும் உருளைக்கிழக்கு பொரியலும் (Fish & Ships) என்ற உணவு வகைக்குரிய 40 விகிதமான மீன்கள் இந்த கடலில் இருந்தே பிடிக்கப்படுகின்றன. எம்மீது தடைகளை விதித்துவிட்டு எமது மீன்களை பிடித்து உண்கின்றனர் என இது தொடாபில் கருத்து தெரிவித்த ரஸ்யாவின் நாடாளுமன்ற உறுப்பினர் வொலடின் தெரிவித்துள்ளார்.

## இடை நடுவில்... தொடர்ச்சி ...

ஏமாற்றி அரசியல் பிழைப்பு தேடிய இவர்கள் இப்போது பால வேலைகளை ஆரம்பித்தும் அதனை கூட முழுமைமாக பூர்த்தி செய்ய முடியாத நிலைக்கு மாறியுள்ளனர். மக்கள் தினமும் போக்குவரத்து செய்வதில் பல சிரமங்களை எதிர் நோக்குகின்றனர் பாடசாலை மாணவர்கள், கர்ப்பிணி தாய்மார்கள் என பலர் இதன் ஊடாக அன்றாடம் ஆற்றை கடந்து பயணிக்க வேண்டியுள்ளது.

“இந்த பாலத்தை உடனடியாக செய்து தருவேன் என்று கூறிய போதும் மூன்று வருடங்கள் கடந்துள்ளது இன்னும் சீர் செய்யவில்லை இதனால் எப்படி போக்குவரத்து செய்வது நாங்கள் பெரும் சிரமத்துக்கு மத்தியில் தான் இவ் ஆற்று நீர் ஊடாக கடந்து பயணிக்க வேண்டியுள்ளது “என அப்பகுதி ஊடாக பயணிக்கும் விவசாயி ஒருவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன் அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்ட நிதி எங்கே ?எனவும் மக்கள் அங்கலாய்க்கின்றனர் இது தொடர்பில் தகவல் அறியும் உரிமை சட்டம் மூலமாக இதன் உண்மை தன்மை பற்றி வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் வினவப்பட்ட போதிலும் அது பலனளிக்கவில்லை.

“இந்த பாலத்தினால் தான் பயணிக்கிறேன் இது இடை நடுவில் கைவிடப்பட்டுள்ளது பாடசாலை மாணவர்கள் உட்பட எல்லோரும் இதனால் செல்கிறார்கள் இங்கு ஒரு பாடசாலை கூட உள்ளது எனவே விரைவாக இதனை பூரணமாக்கி தாருங்கள்” என அப் பகுதியை சேர்ந்த ஒருவர் இவ்வாறு தனது கருத்தை வெளிப்படுத்தியிருந்தார்.

எனவே இப்பாலத்தின் நிர்மாண பணிகளை பூரணமாக்கி வீதிகளை அமைத்து மக்கள் பாவனைக்கு விரைவாக வழங்குமாறு அப்பிரதேச மக்களின் ஏகோபித்த எதிர்பார்ப்பாக காணப்படுகிறது.

• • •

## யாப்புச் சிக்க ... தொடர்ச்சி ...

கஷ்டம்தான். ஏனெனில் யாப்பு மீறப்பட்டிருப்பது வெளிப்படை. ஒன்றில், இணக்கப்பாட்டுக்குச் செல்ல வேண்டும். இல்லையெனில் மீண்டும் ஒரு தேர்தல் என்ற நிலைக்குச் செல்ல வேண்டும். சிறிதரன் அணியைப் பொறுத்தவரையில், நிபந்தனையின்றி வழக்கை வாபஸ் பெற்றால் சமரசத்துக்குத் தயார்.

இல்லையென்றால், வழக்கை எதிர்கொள்ளவும், மீண்டும் தேர்தலை சந்திக்கவும் அவர்கள் தயார். வழக்கைப் போட்டவர்கள் அதனை வாபஸ் பெறமாட்டார்கள் என்பது சிறீதரன் தரப்புக்குத் தெரியும். வழக்கு நடந்தால், யாப்பு விதிகளின் படி தேர்தல் நடத்தப்படும் நிலை வரும் என்பது அவர்களது எதிர்பார்ப்பு. அவ்வாறு தேர்தல் நடைபெற்றால், அதில் தலைவர், செயலாளர் உட்பட முக்கிய பதவிகளைக் கையகப்படுத்திக்கொள்ள முடியும் என்பது அவர்களுடைய நம்பிக்கை!

• • •

## இஸ்ரேலின் ... தொடர்ச்சி ...

முடியாது. பொதுமக்களுக்கு எதிராக மோசமான வன்முறைகளை இஸ்ரேல் மேற்கொள்வதை விடுத்து அவர்களை பாதுகாக்க முன்வரவேண்டும் என ரஸ்யாவின் பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

கடந்த ஒக்டோபர் மாதம் முதல் இஸ்ரேல் மேற்கொண்டுவரும் தாக்குதல்களில் இதுவரையில் 29,000 இற்கு மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன், 70,000 பேர் காயமடைந்துள்ளனர். கொல்லப்பட்டவர்களில் 60 விகிதமானவர்கள் பெண்களும் குழந்தைகளும் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு.
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை.